வாழ்க பெரியார்! வளர்க அவர்தம் கொள்கை!

# விடுதலை

தோற்றம்:1935

உலகின் ஒரே பகுத்தறிவு நாளேடு

VIDUTHALAI - Tamil Rationalist Daily

88 www.viduthalai.in

குறைந்த வட்டிக்கு நகைக்கடன் பெற அணுகுவீர்!

ஆண்டு வட்டி 13.5%

கிராமுக்கு ரூ.3,750/- வரை வழங்கப்படும்

திராவிடன் நிதி நிறுவனம்

பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை - 600 007.

☎ : 044 - 2661 8699 / 4232 7538

▸ பெரியாராண்டு 143 ▸ மலர் 88 இதழ் 84 ▸ பக்கங்கள் 8 ▸ இதழ் நன்கொடை ரூ.6 ▸ செவ்வாய் 23.8.2022 ▸ வெளியீடு: புதன் 24.8.2022 ▸ சென்னை பதிப்பு www.viduthalai.in

# கடுமழையின் காரணமாக திருவாரூர் மாநாடு செப்டம்பர் 4 ஆம் தேதிக்கு ஒத்திவைப்பு!



திருவாரூரில் நேற்று (22.8.2022) மாலை திராவிடர் கழகத்தின் சார்பில் **சனாதன எதிர்ப்பு - திராவிட மாடல் அரசு விளக்க மாநாடு** மிகப் பிரமாண்டமான அளவில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

பிற்பகல் முதல் மக்கள் பேருந்துகள்மூலமும், வேன்கள்மூலமும் குவிந்துகொண்டே இருந்தனர்.

பிரமாண்டமான மேடை - தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், சமூகநீதிக்கான சரித்திர நாயகர் முதலமைச்சர் மானமிகு மாண்புமிகு மு.க.ஸ்டாலின் ஆகியோரது கட்-அவுட்டுகள் ஒளிவெள்ளத்தில் ஜொலித்தன.

இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாடு - மாலை 4 மணி முதல் தொடர்ந்து பொழியத் தொடங்கிய கடும் மழையின் காரணமாக மாநாட்டை நடத்த முடியாத சூழல் ஏற்பட்டது.

வாகனங்களில் வந்த மக்கள் எல்லாம் கீழே இறங்க முடியாமல், வாகனங்களிலேயே அமர்ந்திருக்கும் சூழல் ஏற்பட்டது.

மாநாட்டிற்குத் தலைமையேற்கும் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி, சி.பி.அய்.(எம்) மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், சி.பி.அய். மாநில செயலாளர் இரா.முத்தரசன், திருவாரூர் மாவட்ட தி.மு.க. செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., செந்தில்அதிபன் (ம.தி.மு.க.), திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன், திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் தஞ்சை இரா.ஜெயக்குமார், திருவாரூர் மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் வீ.மோகன் ஆகியோர் கலந்து பேசி, மாநாட்டை கடுமையான மழையின் காரணமாக நடத்த முடியாத ஒரு சூழலில், செப்டம்பர் 4 ஆம் தேதி மாலை சிறப்புடன் நடத்துவது என்ற முடிவை செய்தியாளர்களிடத்தில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி கூறினார்.

### வரலாற்றில் மிக முக்கியமான நாள்

மேலும் செய்தியாளர்களிடம் திராவிடர் கழகத் தலைவர் கூறியதாவது:

இன்றைய நாள் ஜாதி - தீண்டாமை ஒழிப்பு வரலாற்றில் மிக முக்கியமான நாளாகும்.

அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் உரிமை என்னும் மனித உரிமைப் போராட்டத்தில் வெற்றி கிடைத்த நாளாகும். கால் புள்ளியாகவும், அரைப் புள்ளியாகவும் இருந்து வந்த இந்தப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட நாளாகும்.

தந்தை பெரியார் தம் வாழ்நாளில் இறுதியாக அறிவித்த போராட்டம் அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் உரிமை என்னும் போராட்டமாகும்.

அந்தப் போராட்டத்திற்கான அவசியத்தை ஏற்படுத் தாமல் தந்தை பெரியாரின் மாணவரான முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், அதற்கான சட்டத்தையும் நிறைவேற்றியவர். அதனை எதிர்த்து உயர்ஜாதி ஆதிக்கப் பார்ப்பனர்கள் எடுத்த எடுப்பிலேயே உச்சநீதி மன்றம் சென்று முடக்கினர். பல கட்டப் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே வந்தன.

மற்றொரு உச்சநீதிமன்ற தீர்ப்பு அனைத்து ஜாதியின ருக்கும் அர்ச்சகர் உரிமைக்குப் பச்சைக் கொடி காட்டியது.

முதலமைச்சராக மானமிகு மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் வந்த நிலையில், கடந்த 2021 ஆண்டு ஆகஸ்டு 14 அன்று பார்ப்பனர்கள் அல்லாத சமுதாயத்திலிருந்து பல்வேறு ஜாதிகளைச் சேர்ந்தவர் களை அர்ச்சகராகப் பணியமர்த்தும் ஆணையை வழங்கினார்.

அதனை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் உயர்ஜாதியினர் வழக்குத் தொடுத்தனர். தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை இன்று (22.8.2022) வழங்கியுள்ளது.

தமிழ்நாடு அரசின் நியமனம் செல்லும், விதிமுறை களும் செல்லும் என்று அளித்துள்ள தீர்ப்பு வரலாற்றுச் சிறப்பானது.

இவற்றை எல்லாம் விளக்கலாம் என்று எண்ணி யிருந்த நேரத்தில், மழை காரணமாக அந்த வாய்ப்புக் கிட்டவில்லை.

மனித உரிமைப் பிரச்சினைகள், விவசாயிகளின் பிரச்சினைகள், இலவசங்களை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யும் போக்குகள் சூழ்ந்து காணப்படுகின்றன. உச்சநீதிமன்றம் வரை சென்று இலவசங்கள் என்னும் மக்கள் நலத் திட்டங்களை குறுக்கு வழியில் சென்று முடக்க சூழ்ச்சி செய்கிறார்கள். 'திராவிட மாடல்' அரசைப்பற்றிப் பொய்யும் புனைவுமாகப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

அவற்றைப்பற்றி எல்லாம் எடுத்துக் கூறும் மாநாடு - மழையால் இன்று தடைபட்டாலும் செப்டம்பர் 4 அன்று இதே திருவாரூரில் நடக்க இருக்கும் மாநாட்டில், அனைத்துக் கட்சித் தலைவர்களும் விரிவாக எடுத் துரைப்பார்கள் என்று செய்தியாளர்களிடம் திராவிடர் கழகத் தலைவர் எடுத்துக் கூறினார்.

## முதலமைச்சருக்குத் தமிழர் தலைவர் பாராட்டு - வாழ்த்து!



தமிழ்நாடு அரசின் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் நியமனங் களும் - அதற்குரிய விதிகளும் செல்லும் என்று சென்னை உயர்நீதி மன்றம் நேற்று (22.8.2022) தீர்ப்பளித்தது. அதுகுறித்து திருவாரூரில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், இன்று (23.8.2022) சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மாண்புமிகு மானமிகு மு.க.ஸ்டாலின் அவர்களைத் தொலைப்பேசியில் தொடர்புகொண்டு பாராட்டும், வாழ்த்தும் தெரிவித்தார். நேரில் சந்தித்து இதுகுறித்து விரிவாக ஆலோசனை செய்யலாம் என்றும் முதலமைச்சரிடம் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்தார்.













## திருவாரூர் மாநாட்டிற்கு வருகை தந்தவர்களுக்கு சிறப்பான வரவேற்பு!

திருவாரூரில் நேற்று (22.8.2022) மாலை திராவிடர் கழகத்தின் சார்பில் சனாதன எதிர்ப்பு - திராவிட மாடல் அரசு விளக்க மாநாட்டிற்கு வருகை தந்த திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி, திராவிட முன்னேற்றக் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக செந்தில் அதிபன் ஆகியோருக்கு திருவாரூர் மாவட்ட தி.மு.க. செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கலைவாணன் வேட்டி கொடுத்து வரவேற்றார்.

# 'விடுதலை' பணி முடிப்போம், தோழர்களே!

**கவிஞர் கலி.பூங்குன்றன்**
**பொறுப்பாசிரியர், 'விடுதலை'**

அருமைத் தோழர்களே!

தமிழ்நாட்டில் வெளிவரும் மூத்த நாளேடுகளில் 'விடுதலை' முக்கியமானது.

பழைமைவாதங்களை எதிர்த்ததோடு மட்டுமல்லாமல், ஆட்சிகளையும், அடக்குமுறைகளையும் எதிர்த்து தன் வீராவேசத்தைக் காட்டி வந்துள்ளது.

ஆட்சிகளை எதிர்த்துக் கொண்டிருந்தபோதும், கொள்கைக்கு உடன்பாடானவை, நாட்டுக்கு நலன் பயக்கும் செயற்பாடுகள் என்று வந்தால், எதிரிக்கட்சியாக நடந்துகொள்ளாமல், மனந்திறந்து பாராட்டி வருவது 'விடுதலை'க்கே உரித்தான தனிச் சிறப்பு!

அதேபோல, ஆட்சியை ஆதரித்துக் கொண்டிருக்கும்போதே கூட கொள்கைக்கு எதிரானது என்றால், நாட்டு மக்களுக்கு ஊறுவிளைவிப்பது என்றால் எதிர்க்கவும் தயங்குவதில்லை - இதுவும் கழகத்திற்கும், 'விடுதலை'க்கும் உரித்தான உயர்பண்பு நலன்கள்.

அரசு நூலகங்களுக்கு 'விடுதலை' ஆட்சி ஆதரவு - எதிர்ப்பு அடிப்படையில் மாறி மாறி வருவதும் வாடிக்கை.

என்றாலும், 'விடுதலை' தன் வீறுநடையைக் குறைத்துக் கொண்டதில்லை.


ஒருமுறை - எதிர்க்கட்சி வரிசையில் இருந்த மானமிகு துரைமுருகன் முதலமைச்சர் எம்.ஜி.ஆரை நோக்கி சட்டமன்றத்தில் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

“எதிர்க்கட்சி ஏடுகளையெல்லாம் நூலகங்களில் தடை செய்துவிட்டீர்கள். 'விடுதலை' நாளேட்டையுமா தடை செய்யவேண்டும்?” என்று கேட்டதுண்டு.

அதேபோல, எம்.ஜி.ஆர். ஆட்சியில், சிறைச்சாலைகளுக்குப் போடப்பட்டு வந்த 'விடுதலை' நிறுத்தப் பட்டது.

அதனை எதிர்த்து நமது 'விடுதலை' ஆசிரியர் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுத்தார்.

உடனே, எம்.ஜி.ஆர். அரசு, சிறைச்சாலைகளில் 'விடுதலை' போடப்படலாம் என்று ஆணை பிறப்பித்த காரணத்தால், அந்த வழக்கைத் திரும்பப் பெறுமாறு நீதிபதி கேட்டுக்கொண்டதன் பேரில் வழக்குத் திரும்பப் பெறப்பட்டது.



இப்படி தடைக் கற்களைத் தாண்டித் தாண்டியே 'விடுதலை' வந்துள்ளது.

இந்த நிலையில் நமது தலைவர் ஆசிரியர் மானமிகு கி.வீரமணி அவர்களின் 50 ஆண்டு 'விடுதலை' ஆசிரியர் பணியையொட்டி 50 ஆயிரம் 'விடுதலை' சந்தாக்களைத் திரட்டித் தந்தோம்.

இப்பொழுது 60 ஆண்டுப் பணி என்னும் உலக சாதனையை நிகழ்த்திய ஆசிரியருக்கு 60 ஆயிரம் சந்தாக்களை அளித்து சரிதம் படைக்கவிருக்கிறோம்.

செப்டம்பர் 6 ஆம் தேதி மாலை சென்னையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் பங்கேற்கும் விழாவில் 'விடுதலை' சந்தாக்களை வழங்குவோம் - விரைந்து பணியாற்றுவோம்!

கருஞ்சட்டைத் தேனீக்களே! இடையில் சில நாட்கள்தான் - பறந்து பறந்து பணியாற்றுவீர் - பணியாற்றுவோம்!

உங்களின் உழைப்பை வரலாறு தன் உச்சத்தில் வைத்துப் புகழும்.

தமிழர் தலைவர் தலைமையில் தந்தை பெரியாரின் பணி முடிப்போம்! பணி முடிப்போம்!!

## தலையங்கம்



தந்தை பெரியார் அறிவுரை

**பழக்கத்தால் பாழாகும் பெண்கள்**

மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு, கற்பு என்பவை ஆடவர்களுக்கும், பெண்களுக்கும் பொதுவாக உள்ளதேயொழிய பெண்களுக்கு மாத்திரம் என்று சொல்வது நியாயம் ஆகாது. பெண்கள் சிறு குழந்தைகளிலிருந்தே அழுதும், பேயாடப் பழகியும் வருகிறார்கள். இதனால் தான் அவர்களுடைய வயது காலங்களில் அழுவதும் பேயாடக் கூடியதாகவும் இருக்கிறதேயொழிய, இறந்து போய் விட்டதன் துக்கத்தினால் அழக்கூடியதாகவும் பேய்கள் பிடித்து ஆடக்கூடியதாகவும் இருக்கின்றதென்று சொல்ல முடியாது.

(1.3.1936, "குடிஅரசு")



விடுதலை
சென்னை • செவ்வாய் • ஆகஸ்ட் 23 - 2022

# பிஜேபி ஆளும் மாநிலங்களில் கல்வியில் நுழைக்கப்படும் நஞ்சு

அனைத்துப் பள்ளிக் குழந்தைகளுக்கும் சமஸ்கிருதத்தை மூன்றாம் மொழியாகக் கற்பிக்க கருநாடக அரசு தீர்மானித்துள்ளது. மனுஸ்மிருதி மற்றும் பூத-சாங்க்யா, கடபயாதி-சாங்க்ய, பத்தாதி போன்ற பண்டைய எண் முறைகளை பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்த உள்ளது.

புதிய கல்விக் கொள்கையின் வழி அறிமுகப் படுத்தப்படும் பள்ளிப் பாடத் திட்டத்தில், "பிதாகரஸ் தேற்றம், நியூட்டனின் தலையில் ஆப்பிள் விழுதல் போன்ற போலிச் செய்திகள் எவ்வாறு உருவாக்கப்பட்டு பிரச்சாரம் செய்யப்படுகின்றன" என்று கேள்வி கேட்க மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

புதிய கல்விக் கொள்கையின் (NEP) கீழ் பாடத் திட்டக் கட்டமைப்பு குறித்து ஒன்றிய அரசுக்கு மாநில அரசு சமர்ப்பித்த சில பரிந்துரைகள் குறித்து கருநாடகாவில் உள்ள கல்வியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

புவியீர்ப்பு விசையைக் கண்டு பிடிக்க காரணமாக இருந்தது நியூட்டன் தலையில் விழுந்த ஆப்பிள் என்று சொல்லப்படுகிறது. அதேபோல் பிதாகரஸ் தேற்றம் ஆகியவை "போலி செய்தி" என்று ஒன்றிய அரசுக்கு கருநாடக அரசு பள்ளிக்கல்வித்துறை பணிக் குழுவின் தலைவர் மதன் கோபால் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறும் போது, "இது குழுவின் விளக்கம். புவியீர்ப்பு மற்றும் பிதாகரஸ் ஆகியவை வேத கணிதத்தின் வேர்களைக் கொண்டுள்ளன. இது ஒரு இந்திய மய்ய அணுகுமுறை. கூகுளில் இதைப் பற்றிய பல தகவல்கள் உள்ளன. உதாரணமாக, பவுதயன் வேத நூல்களில் பிதாகரஸ் தேற்றத்தை வகுத்ததாக நம்பப்படுகிறது. இது ஒரு கண்ணோட்டம். நீங்கள் அதை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கலாம்." என்று தெரிவித்துள்ளார்.

பள்ளிக் கல்வி குறித்த புதிய பாடங்களைத் தயாரிக்க 26 குழுக்களை கருநாடக மாநில அரசு அமைத்தது.

"மதச்சார்பின்மை என்ற போர்வையில் நமது மூதாதையர்களின் சாதனைகள் மறைக்கப்பட்டுள்ளன. இதை நீக்கி நமது பாரம்பரியத்தை மீட்கவே புதியக் கல்விக் கொள்கையை ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது" என்று அந்தக்குழு கூறியுள்ளது.

"ஆயிரக்கணக்கான மொழிகள் உள்ள நாட்டில் மாநில மொழி, ஆங்கிலம் மற்றும் மற்றொரு இந்திய மொழியைக் கற்க வேண்டும். அந்த மொழிகளில் நமது பழைமையான மொழியான சமஸ்கிருதத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. நமது நாட்டை நீண்ட காலமாக அந்நியர்கள் ஆட்சி செய்த காரணத்தால் நமது வரலாறுகள் மற்றும் இதிகாசக்கருத்துகள் இருட்டடிப்புசெய்யப்பட்டுள்ளன" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதனின் அறிவு வளர்ச்சியால், சிந்தனைப் பலத்தால் மானுடம் வெகு வேகமாக வளர்ந்து வருகிறது.

இது பழைமைவாதிகளின் ஆதிக்க வேர்களின் மீது வீசப்படும் அணுகுண்டாகக் கருதப்படுகிறது. அதே நேரத்தில் தங்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்காக இந்தப் பழைமைவாதிகள் இந்த அறிவியல் வளர்ச்சியின் சாதனங்களைப் பயன்படுத்தவும் தவறுவதில்லை.

ஆனால் பாடத் திட்டங்களில் பழைமை வாதத்தைத் திணிப்பது மிகப் பெரிய ஆபத்தாகும்.

பி.ஜே.பி. ஆளும் மாநிலங்களில் சமஸ் கிருதத்தைத் திணிப்பது ஏன்? பார்ப்பனக் கலாச்சாரத்தைத் திணிப்பதே அதன் நோக்கமாகும்.

பி.ஜே.பி. தலைமையிலான ஆட்சி மாநிலங்களில் அமைந்தாலும் சரி, ஒன்றியத்தில் அமைந்தாலும் சரி அது மிகப் பெரிய ஆபத்தே - நாட்டின் வளர்ச்சிக்கும் கேடே!

## அதிகரிக்கும் பாலியல் வல்லுறவு நிகழ்வுகள்

# 'பாலியல் கல்வி' தான் ஒரே தீர்வு

### மேனாள் நீதிபதி எஸ்.விமலா கருத்து



**சென்னை, ஆக.23** இந்தியாவில் 'போக்சோ' போன்ற கடுமையான சட்டங்கள் இருந்தும்,பெண்களுக்கு எதிரான பாலியல் வல்லுறவு நிகழ்வுகள் நாள்தோறும் அதிகரித்து வருவதற்கு காரணம் சட்டம் பற்றிய சரியான புரிதல் இல்லாததே என சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர். அதேநேரம் 'பாலியல் கல்வி தான் இதற்கு ஒரே தீர்வு' என்கிறார் உயர் நீதிமன்ற மேனாள் நீதிபதி எஸ்.விமலா.

கடந்த 1972ஆம் ஆண்டு இந்தியாவில் சிறைக்காவலில் இருந்த மதுரா என்ற பழங்குடியினப் பெண், மகாராட்டிராவின் கட்சிரோலி மாவட்டத்தில் காவல்நிலைய வளாகத்தில் 2 காவலர்களால் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டார். குற்றம் சாட்டப்பட்டவர்களை உச்சநீதிமன்றம் விடுவித்த பிறகு, பொது மக்கள் நடத்திய போராட்டத்தால் குற்றவியல் சட்டத்தில் பல்வேறு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

**போக்சோ சட்டம் 2012**

அதேபோல கடந்த 2012ஆம் ஆண்டு டெல்லியில் ஓடும் பேருந்தில் நடந்த நிர்பயா பாலியல் வல்லுறவு நிகழ்வுக்குப் பிறகே பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் 'போக்சோ சட்டம் 2012' பற்றிய விழிப்புணர்வு அதிகம் ஏற்பட்டது. ஆனால் நிர்பயா வழக்கில் கைதான 4 குற்றவாளிகளும் தூக்கிலிடப்பட்ட பிறகும், இந்தியாவில் பாலியல் வல்லுறவு நிகழ்வுகள் குறைந்துள்ளதா என்றால் கேள்விக்குறியே மிஞ்சுகிறது. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் தினமும் பெண்களுக்கு எதிராக 95 பாலியல் வன்கொடுமை நிகழ்வுகள் அரங்கேறி வருவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அதுவே குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை தினமும் 100 அய்த் தாண்டுகிறது.

கடந்த 2020இல் மட்டும் நாடு முழுவதும் 73 ஆயிரத்து 721 பெண்கள் கடத்தப்பட்டுள்ளதாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 47 ஆயிரத்து 876 பேர் சிறுமிகள். 25 ஆயி ரத்து 845 பேர் வளரிளம் பருவத்தினர்.

அதேபோல் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்காக கடந்த 2020இல் ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 531 வழக்குகள் பதிவாகியுள்ளன. அதில், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வல்லுறவுக்காக மட்டும் 38.8 சதவீத வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த 2020 கணக்கெடுப்பின்படி நீதிமன்றங்களில் விசாரணையில் உள்ள ஒரு லட்சத்து 69 ஆயிரத்து 558 பாலியல் வல்லுறவு வழக்குகளில் 3 ஆயிரத்து 814 பேருக்கு மட்டுமே சட்டரீதியாக தண்டனை பெற்று கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டரை வயது பெண் குழந்தைக்கு எதிரான ஒரு பாலியல் வழக்கில் 'செமன்' என குறிப்பிடுவதற்குப் பதிலாக 'செம்மண்' என காவல் துறையினர் ஆங்கிலத்தில் தவறுதலாக ஆவணங்களில் குறிப்பிட்டதால், அதைப் பயன்படுத்தி குற்றவாளி தண்டனையில் இருந்து தப்ப, அந்தத் தவறை உயர் நீதிமன்றம் சரிசெய்து குற்றவாளிக்கு சிறை தண்டனை விதித்தது.

ஒருவேளை அந்த பாதிக்கப்பட்ட குழந்தையின் தாயார் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருக்காவிட்டால் அந்த குற்றவாளிக்கு தண்டனை கிடைத்து இருக்காது. இதுபோல சட்டத்தில் உள்ள முரண்பாடுகள் அவ்வப்போது குற்றவாளிகளுக்கு சாதகமாகி விடுகிறது.

இந்தியாவில் சட்டங்கள் கடுமையாக இருந்தும், அதற்கான உள் கட்டமைப்புகள் இருந்தும் சட்டம் பற்றிய புரிதல் படித்தவர்கள் மத்தியிலும் சரியாக இல்லை என சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இதுதொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற மேனாள் நீதிபதி எஸ்.விமலா கூறியதாவது:

பொதுமக்களிடம், சட்டம் பற்றிய புரிதல் இல்லை என ஒரேயடியாகக் கூறிவிட முடியாது. இதுபோன்ற வழக்குகளில் அரசு அதிகாரிகளின் பங்களிப்பு என்ன என்பதைப் புரிந்து செயல்பட வேண்டும். 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தொடர்பான வழக்கை விசாரிப்பதற்கும், 18 வயதுக்குக் கீழ் உள்ளவர்கள் தொடர்பான வழக்கை விசாரிப்பதற்கும் நீதிபதி களுக்கு நிறைய நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன.

**அடிப்படையிலேயே தவறு**

மற்ற வழக்குகளைப் போல, பாலியல் வழக்குகளில் அரசு மருத்துவர்கள், காவல்துறை அதிகாரிகள் செயல்படக் கூடாது.

ஆனால் போக்சோ சட்டம் ஜீரோ முதல் 18 வயது பெண்கள் வரை அனை வரையும் ஒன்றாக பாவிக்கிறது. உலகமே என்னவென்று தெரியாத ஜீரோ வயதையும், உலகத்தை அறிந்து கொள்ளும் 18 வயதையும் இந்தச் சட்டம் ஒன்றுதான் எனக் கூறுகிறது. அது அடிப்படையிலேயே தவறானது.

பெண்களுக்கு 7 பருவங்கள் உண்டு. ஒவ்வொரு பருவத்துக்கும் ஒவ்வொரு மாதிரியான புரிதல்கள் உண்டு. 16 வயது முதல் 18 வயதுக்குட்பட்ட இளம் பெண்கள் தொடர்பான பாலியல் வழக்குகளில் தான் குற்றவாளிகள் தண்டனையில் இருந்து எளிதாகத் தப்பித்து விடுகின்றனர். இதற்கு பாதிக்கப்பட்ட பெண்கள் அளிக்கும் பிறழ் சாட்சியங்களே முக்கிய காரணம். இறுதியில் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அநாதை இல்லங்களில் வளரும் அவலம் ஏற்படுகிறது.

எனவே 16 முதல் 18 வயதுக்கு இடைப்பட்ட வளரிளம் பருவத்தின ருக்கு 'பாலியல் கல்வி' குறித்த விழிப் புணர்வு மிகவும் அவசியமானது. மனதளவில் மாற்றத்தை ஏற்படுத்தும் பாலியல் கல்வி மட்டுமே இதற்கு ஒரே தீர்வு. இந்த விஷயத்தில் ஒன்றிய, மாநில அரசுகள் கவனம் செலுத்தினாலே குற்ற வழக்குகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிடும். இவ்வாறு அவர் கூறினார்.

# 'ஒரே நாடு ஒரே தேர்வு' நிலைப்பாடு பன்முகத்தன்மையை மறுக்கிறது

### கேரள முதலமைச்சர் குற்றச்சாட்டு



**திருவனந்தபுரம், ஆக.23-** 'ஒரே நாடு ஒரே தேர்வு' என்ற பாஜக அரசின் நிலைப்பாடு பிரதேச வேறுபாடு மற்றும் தேவைகளை கருத்தில் கொள்ளாமல் உள்ளது என நிஷாகந்தியில் எஸ்.எப்.அய். தெற்கு மண்டல அணி வகுப்பு நிறைவு விழாவை தொடங்கி வைத்த கேரள முதலமைச்சர் பினராயி விஜ யன் கூறினார்.

பல்வேறு கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்காக அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே தேர்வை நடத்துவது கடு மையான தோல்விக்கு வழி வகுப்பதை பார்க்கிறோம். இதுபோன்ற தேர்வுகளால் ஏற்படும் சிக்கல்கள் குறித்து எஸ்எப்அய் எச்சரித்தாலும், ஒரே தேர்வு போதும் என்ற நிலைப்பாட்டில் ஒன்றியம் தொடர்கிறது. பிரதேச பன்முகத் தன்மை மற்றும் தேவைகளைப் புறக்கணிக்கும் இத்தகைய தேர்வுகள், நன்மையை விட தீமையையே அதிகம் செய்கின்றன. மத்திய பல்கலைக் கழகங்களுக்கு நடத்தப்படும் 'சியூஇடி' பொதுத் தேர்வு, பிரச்சினைகளால் பல இடங்களில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புதிய தேசிய கல்விக் கொள்கையின் மூலம், கல்வித் துறையில் பாகுபாட்டையும், காவிமயமாக்கலையும் ஒன்றிய அரசு செயல்படுத்திவருகிறது. நாட்டில் மூடப்படும் அரசுப் பள்ளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதி கரித்து வருகிறது. கடந்த ஆண்டு மட்டும் 5000 பள்ளிகள் மூடப்பட்டன. தனியார் துறையில் 12,000 பள்ளிகள் திறக்கப் பட்டன. ஒரு வருடத்தில் உயர்கல்வித் துறையில் 19,000 இடங்களை இந்த மய்யம் குறைத்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இலவச பொதுக் கல்விக்கான வாய்ப்பை ஒன்றிய அரசு குறைத்து வருகிறது. கடந்த காலங்களில் காங்கிரஸ் பின்பற்றிய கொள்கைகள் பாஜக ஆட்சியில் இன்னும் தீவிரமாக செயல்படுத்தப் பட்டு வருகிறது.

அதே நேரத்தில், கடந்த ஆறு ஆண்டு களில் அரசு பொதுக் கல்வியில் கேரளம் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. அரசுப் பள்ளிகளில் இருந்து இடைநிறுத்தப்படும் குழந்தைகளின் பழைய முறை முடிந்துவிட்டது. 10 லட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் அரசுப் பள்ளி களுக்குச் சென்றுள்ளனர். உயர்கல்வித் துறையிலும் சீர்திருத் தங்கள் விரைவில் தொடங்கும். அரசு நியமித்துள்ள உயர்கல்வி சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகள் செப்டம்பர் மாதம் அமல்படுத்தப்படும் என முதலமைச்சர் பினராயி விஜயன் தெரிவித்தார்.

# இலவச சீருடை வழங்க ரூ.4.14 கோடி



**சென்னை, ஆக.23** அங்கன்வாடியில் படிக்கும், 1.58 லட்சம் குழந்தைகளுக்கு, இலவச சீருடை வழங்க, 4.14 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அங்கன்வாடி மய்யங் களில், ஒரு லட்சத்து 58 ஆயிரத்து 63 குழந்தைகள் படிக்கின்றனர். இவர்களில், 80 ஆயிரத்து 10 பேர் சிறுவர்கள்; 78 ஆயிரத்து 53 பேர் சிறுமியர். இவர்களுக்கு தலா இரண்டு சீருடைகள், இலவசமாக வழங்கப்பட உள்ளன. இதற்காக, அரசு சார்பில், 4.14 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில், 3 லட்சத்து 16 ஆயிரத்து 126 சீருடை களை தயார் செய்து வழங்க, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சார்பில், ஒப்பந்தம் விடப்பட்டுள்ளது.

# 25 லட்சம் மாணவர்களுக்கு இலவச பேருந்து அட்டை

**சென்னை, ஆக.** 23 தமிழ்நாட்டு பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு வழங்குவதற்காக 25 லட்சம் பயண அட்டை தயாரிக்கும் பணி விரைவில் தொடங்கப்பட இருப்பதாக போக்குவரத்து துறை உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: தமிழ்நாட்டில் அரசுப் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு வசிப்பிடத்தில் இருந்து கல்வி நிலையங்களுக்குச் சென்று வரும் வகையில் இலவச பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான தொகையை ஈடு செய்வதற்காக ரூ.928 கோடியை போக்குவரத்து கழகங்களுக்கு அரசு வழங்குகிறது.

கரோனா பொதுமுடக்கம் காரணமாக கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக மாணவர்களுக்கான பயண அட்டை வழங்கப்படவில்லை. ஆனால், பழைய பயண அட்டை, பள்ளி, கல்லூரிகளில் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை போன்றவற்றை நடத்துநர் களிடம் காண்பித்து, பேருந்துகளில் கட்டணமில்லாமல் கல்வி நிலையம் சென்றுவர அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

சீருடை அணிந்திருந்தாலே மாணவர்களை பேருந்துகளில் இருந்து இறக்கிவிடக் கூடாது என நடத்துநர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதனால் மாணவர்கள் எந்த பிரச்சினையும் இன்றி பேருந்துகளில் பயணித்து வந்தனர்.

**விவரங்கள் சேகரிப்பு**

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான பேருந்து பயண அட்டை தயாரிப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. முதல் கட்டமாக, மாணவர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்கள் பள்ளிகளிடம் இருந்து பேருந்து பணி மனைகளில் பெறப்பட்டன. இதையடுத்து, அறிக்கைதயார் செய்யப்பட்டு, போக்குவரத்து துறை சார்பில் அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதன்படி, சுமார் 25 லட்சம் பேருந்து பயண அட்டைகள் விரைவில் தயாரிக்கப்பட உள்ளன. இதற்கான ஒப்பந்தக் கோரல் அறிவிப்பு விரைவில் வெளியாகும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# எழுச்சியூட்டும் அரியலூர் இளைஞர் அணி மாநாடு

கடந்த ஜூலை 30ஆம் தேதி அரியலூரில் இளைஞர் அணி மாநில மாநாடு நடைபெற்றது. அதில் கலந்து கொள்ளும் அரிய வாய்ப்பைப் பெற்றேன்.

காலை அமர்வில் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டன. அதில் விடுபட்டவை ஆசிரியரின் கவனத்திற்கு சென்று மீண்டும் வாசிக்கப்பட்டன.

யோக கலையைத் தாங்கள்தான் மீட்டெடுப்பு செய்வதுபோல் விளம்பரபடுத்திக் கொள்ளும் விளம்பர பிரியர்களுக்கு விடை கொடுக்கும் விதமாக நம்முடைய பாரம்பரிய கலைகளில் அதுவும் ஒன்று என்று நிரூபித்துக் காட்டினர் மாணவ செல்வங்கள். அதிலும் ஆசிரியர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று தமிழில் வாசகம் அமைத்து செய்து காட்டிய விதம் அருமை - ஆசிரியர் அவர்களின் உரையில் விடுதலை சந்தா சேர்ப்பு நம் இனத்திற்கு எவ்வளவு முக்கியம் மற்றும் ஒன்றிய அரசின் - மாணவ மாணவிகளுக்கு எதிரான புதிய கல்வி கொள்கையை எதிர்த்து இறுதியில் வெற்றி அடைவது நாம் என்ற போர்க்குண போர்முரசு அரங்கம் அதிர கேட்டோம்.

மாலையில் பேரணி சங்பரிவாரங்களின் சங்கை நெரிக்கும் விதத்தில் அமைந்தது. பீறிட்டு எழுந்த இளைஞர்களின் எழுச்சி புதிய புத்தாக்கத்தை தந்தது. பெரியாரின் இராணுவக் கட்டுப்பாட்டுடன் புறப்பட்ட பேரணியில் மூடநம்பிக்கையை முறித்தெறியும் காட்சிகள் கண்டு ஆயிரக்கணக்கானோர் அசந்து போனார்கள்.

மாலை திறந்தவெளி மாநாடு சிறப்பான ஏற்பாடுகளுடன் தொடங்கிய வேளையில், எதிரிகளுக்கு இசைவு காட்டுவது போல் இயற்கை சற்று மிரட்டியது. ஆனாலும் கடைசியில் தோற்றது.

அந்தப் பகுதியின் இயக்க முன்னோடிகளின் வாரிசுகள் இன்றைய சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெரு மக்கள் என்பதை அங்கு வந்துதான் அறிந்துகொண்டோம். நாங்கள் என்றைக்கும் கடவுள் மறுப்பாளர்கள் என்று பறைசாற்றிய கொள்கையின் மகரந்தமாக இருந்தது அவர்களின் உரை. சங்கி கூட்டம் கொடுக்கும் தொல்லைகளை எடுத்துக் கூறினார்கள். சிவன் கோவில் சுவரெழுத்திற்கு அமைச்சர் சிவசங்கரின் வீடு முற்றுகையாம் - திராவிட மாடல் ஆட்சியின் மீது எவ்வளவு வெறுப்பு இவர்களுக்கு. திராவிடர் கழக மாநாடு என்றால் வரலாற்றைக் கூறுவது மட்டுமல்ல வரலாறுப் படைக்கும் என்பதை நிரூபிக்கும் காட்சிகள் நிறைய உண்டு. மணமகன் - மணமகள் சம்மதத்தோடு திறந்தவெளி திருமணம், பெண்களின் அடிமை சின்னமாம் தாலியை சுய விருப்பத்தோடு அகற்றிக் கொள்ளும் நிகழ்ச்சி! ஆசிரியர் அய்யா அவர்கள் கூறியதுபோல் பெரியார் கொள்கை வெற்றிக்கனியை பறித்துக் கொண்டு இருக்கிறது என்பதில் அய்யமில்லை.

மிகக் குறுகிய காலத்தில் இப்படியொரு மாநாட்டை நடத்திக் காட்டிய அரியலூர் பொறுப்பாளர்கள் - கழகத்தின் பொதுச் செயலாளர்கள் இவர்களின் உழைப்புக்கு ஈடே இல்லை என்று எண்ணுகிறேன். பண்டார சன்னதிகள் உலா வருவதை விலா வாரியாக காட்டும் தொலைக்காட்சிகள், செய்திதாள்கள் இப்படி ஒரு மாநாட்டை பற்றிய செய்தியை வெளியிட தயங்குகிறார்கள் என்பது வருத்தமே!

**- பா. நாகராஜன்**
நகரச் செயலாளர், திருத்துறைப்பூண்டி



பெரியார் மணியம்மை அறிவியல் தொழில்நுட்ப நிறுவனம் (நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில்) கோ.சரவணபெருமாள் உயிரி தொழில்நுட்பவியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றதன் மகிழ்வாக தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இவர் மருந்தியல் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. உடன்: பெரியார் மருந்தியல் கல்லூரி முதல்வர் முனைவர் இரா.செந்தாமரை.

## ஜாதி மறுப்பு இணையேற்பு



பிரிதி-அபிசேக் சர்கார் ஆகியோரின் ஜாதி மறுப்பு திருமணத்தை பெரியார் சுயமரியாதைத் திருமண நிலைய இயக்குநர் பசும்பொன் இன்று (23.8.2022) நடத்தி வைத்தார். (சென்னை பெரியார் திடல்).

### புதுச்சேரியில் 60,000 விடுதலை சந்தா சேர்ப்பு குறித்து

# ஆறு மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்டம்

## தமிழர் தலைவர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது

**புதுச்சேரி, ஆக. 23-** திராவிடர் கழக பொதுக்குழு தீர்மானத்தின் படி, தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்கள் 60 ஆண்டுகள் உலகின் ஒரே பகுத்தறிவு நாளேட்டுக்கு ஆசிரியராக தொடர்ந்து இருப்பதன் சிறப்பை உணர்ந்து 60,000 விடுதலை சந்தா சேர்க்கும் திட்டப்படி புதுச்சேரியில் 16.8.2022 செவ்வாய் காலை 10 மணி அளவில் புட் பாரடைஸ் உணவகத்தில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.




புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், விருத்தாசலம், விழுப்புரம், திண்டிவனம்மாவட்டங்களின் கழக தலைவர்கள், பொறுப்பாளர்கள் பங்கேற்ற நிகழ்வுக்கு திராவிடர் கழக தலைவர் விடுதலை ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமை தாங்கினார். செயலவைத் தலைவர் சு.அறிவுக்கரசு, கழக பொதுச் செயலாளர்கள் முனைவர் துரை.சந்திரசேகரன், தஞ்சை இரா.ஜெயக்குமார், கழக அமைப்பாளர் உரத்தநாடு இரா.குணசேகரன், புதுச்சேரி மாநில திராவிடர் கழக தலைவர் சிவ.வீரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக பொதுச் செயலாளர்கள் தஞ்சை இரா.ஜெயக்குமார், முனைவர் துரை.சந்திரசேகரன், கழக செயலவைத் தலைவர் சு.அறிவுக்கரசு ஆகியோரின் விடுதலை சந்தா சேர்ப்பு குறித்தும் அவசியமாக கருதி சீக்கிரமாக பணியை முடித்து தமிழர் தலைவரிடம் சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சியில் தர வேண்டுமென உரையாற்றியதை அடுத்து இறுதியாக தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டியும், கழக பொறுப்பாளர்கள் எந்தெந்த நேரத்தில் எவ்வாறெல்லாம் செயல்பட்டு விடுதலை சந்தாவை சேர்க்க வேண்டும் எனவும் அறிவுறுத்தி அன்பான வேண்டுகோள் உரை நிகழ்த்தினார்.

கழக மாவட்ட பொறுப்பாளர்கள் தங்களின் மாவட்டத்தில் சேர்த்த விடுதலை சந்தாக்களை தலைவரிடம் அளித்து மகிழ்ந்தனர். உணவகத்தில் அனைவருக்கும் உணவு ஏற்பாட்டினை புதுச்சேரி மாவட்ட கழக தலைவர் சிறப்பாக செய்திருந்தார். கலந்துரையாடல் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1. தமிழர் தலைவர் ஆசிரியரின் 60 ஆண்டு விடுதலை ஆசிரியர் பணியை பாராட்டி, கழக தலைவன் கட்டளைப்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்ட விடுதலை சந்தா எண்ணிக்கையை முடித்து தருவது எனவும்,

2. சென்னையில் நடைபெற உள்ள விடுதலை சந்தா வழங்கும் விழாவில் குடும்பம் குடும்பமாக கழக தோழர்கள் சென்று கலந்து கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது,

கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்கள்: மாநில அமைப்புச் செயலாளர் ஊமை. ஜெயராமன், சிதம்பரம் கழக மாவட்ட தலைவர் பேராசிரியர் பூ.சி.இளங்கோவன், மாநில கழக இளைஞரணி செயலாளர் த.சீ.இளந்திரையன், சிதம்பரம் மாவட்ட துணைத் தலைவர் கோ.வி.பெரியார்தாசன், சிதம்பரம் மாவட்ட ப.க.பொறுப்பாளர் கோ.நெடுமாறன், கடலூர் மாவட்ட தலைவர் தென்.சிவக்குமார், கடலூர் மண்டல கழக தலைவர் சொ.தண்டபாணி, கடலூர் மண்டல செயலாளர் ஆர்.பன்னீர்செல்வம், புதுச்சேரி மண்டல கழக செயலாளர் கி.அறிவழகன், மகளிர் அணி தலைவர் அ.எழிலரசி, கழக பொதுக்குழு உறுப்பினர் கோ. புத்தன், வடலூர் நகர கழக தலைவர் புலவர் சு.இராவணன், அண்ணா கிராம ஒன்றிய செயலாளர் இராஜேந்திரன், புதுச்சேரி கழக பொதுக்குழு உறுப்பினர்கள் லோ.பழனி, விலாசினி இராசு, கடலூர் மாவட்ட ப.க. தலைவர் இரா. கந்தசாமி (எ) தமிழன்பன், செயலாளர் க.எழிலேந்தி, க.சுகுணா எழிலேந்தி, ஆர். கலைவாணி, திண்டிவனம் மாவட்ட கழக தலைவர் இர. அன்பழகன், மா.அரிமாவளவன், திண்டிவனம் நகரத் தலைவர் பச்சையப்பன், புதுச்சேரி ப.க. மேனாள் செயலாளர் கோ.மு.தமிழ்ச்செல்வன், திராவிடர் கட்டுமான சங்கத்தின் தலைவர் புதுவை கோ.குமார், இரா.சாம்பசிவம், வே.அன்பரசன், திண்டிவனம் கழக மாவட்ட அமைப்பாளர் வில்லாளன், கோதை, பாகூர் பொன்.தாமோதரன், புதுச்சேரி கழக இளைஞரணி தலைவர் திராவிட இராசா, தி.சந்திரசேகரன், ச.பிரபஞ்சன், கங்கை அமரன், வேப்பூர் பி. பழனிசாமி, விருத்தாசலம் ஜி.ஷஷா, புதுச்சேரி கழக மகளிரணி தேவகி பழனி, வரலட்சுமி பழனி, ப.ராகப்பிரியா, மாணவர் அணி ப.தமிழ்பிரியன், செ.இராமராஜ், டி. செல்வகாந்தி, வை.முத்துராஜ், நிலவன், திருச்சி அர்ச்சுனன், உட்கோட்டை ஏ.கே.அருள்மணி, தென்காசி சு.இனியன், புதுச்சேரி மணவாளன், நெய்வேலி பாவேந்தர் விரும்பி, கடலூர் மாவட்ட கழக அமைப்பாளர் சி.மணிவேல், களத்தூர் பழனிராஜ், சேர்ந்தநாடு ஆர். பரணிதரன், விழுப்புரம் நகர கழக செயலாளர் ச.பழனிவேல், விழுப்புரம் மண்டல கழக செயலாளர் தா.இளம்பரிதி, மாநில இளைஞரணி துணை செயலர் தா.தம்பி பிரபாகரன், ஒன்றிய செயலாளர் க.செல்வகுமார், விழுப்புரம் மாவட்ட கழக தலைவர் ப.சுப்பராயன், நகர கழக தலைவர் கொ.. பூங்கான், சேர்ந்தநாடு தி.மு.க. செயலாளர் ப.முருகதாஸ், திண்டினம் ரமேஷ், புதுச்சேரி துரை சிவாஜி, ஆ.சிவராசன், மயிலம் ஒன்றிய கழக செயலாளர் தழுதாளி ச.அன்புக்கரசன், புதுச்சேரி மு.ஆறுமுகம், களஞ்சியம் வெங்கடேசன், பெ.ஆதி நாராயணன், திண்டிவனம் செ.பரந்தாமன், புதுச்சேரி ப.க. தலைவர் கைலாச நெ.நடராசன், விருதாசலம் கபிலன், பொழிலன், கழக பேச்சாளர் யாழ் திலீபன், சிதம்பரம் அன்பு சித்தார்த்தன், விருத்தாசலம் மாவட்ட கழக தலைவர் அ.இளங்கோவன், மண்டல அமைப்பாளர் வை.இளவரசன், பரங்கிப்பேட்டை ஒன்றிய கழக செயலாளர் துரை.செயபால், சிதம்பரம் மாவட்ட மேனாள் அமைப்பாளர் கு.தென்னவன், புதுச்சேரி மு.குப்புசாமி, விருத்தாசலம் வெற்றிச்செல்வன் மகேஷ், திட்டக்குடி நாத்திக நம்பி, புதுச்சேரி கழக இளைஞரணி செயலாளர் கோ.அல்போன்ஸ், செ.கா. பாஷா, அருணா லேப் மகேஷ், மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஆசிரியரின் வருகையை யொட்டி கழக கொடிகள் இரு புறமும் கட்டப்பட்டிருந்தது.

# திராவிட இயக்க கொள்கைப் பூக்களில் மிதந்த குத்தாலம் நகரப் பூங்கா!

**குத்தாலம், ஆக. 23-** குத்தாலம் ஒன்றிய திராவிடர் கழகத்தின் சார்பில் நூறு அகவை நெருங்கும் பெரியார் தொண்டர் ச.கோவிந்தசாமி அவர்களுக்குப் பாராட்டு விழா பொதுக் கூட்டம் 20.8.2022 சனிக்கிழமை மாலை குத்தாலம் நகர பூங்காவில் நடைபெற்றது.



மாவட்ட தலைவர் ஆ.ச. குணசேகரன் தலைமை வகிக்க ஒன்றிய தலைவர் சா.முருகையன், நகர தலைவர் சா.ஜெகதீசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் கி.தளபதிராஜ் அனைவரையும் வரவேற்று நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். மாலை நான்கு மணியிலிருந்தே திராவிட இயக்க தோழர்கள் குடும்பம் குடும்பமாக நகர பூங்காவில் சங்கமமாகத் தொடங்கினர். நிகழ்ச்சி தொடங்கும் முன்னரே பூங்கா நிரம்பி வழிந்தது. மாலை 6.30 மணிக்கு கழக பேச்சாளர் இராம.அன்பழகன் தனது மூட நம்பிக்கை ஒழிப்பு உரையை தொடங்கி 1.30 மணி நேரம் அடை மழையாய் அசத்தினார். சரியாக எட்டு மணிக்கு தமிழர் தலைவர் அவர்களை கழக பொறுப்பாளர்கள் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் அருகிலிருந்தும், தி.மு.க. மாவட்ட பொறுப்பாளர் நிவேதா எம்.முருகன், தேர்தல் பணிக்குழு செயலாளர் குத்தாலம் பி.கல்யாணம் ஆகியோர் பூங்கா வாயிலிலிருந்தும் வரவேற்று அழைத்து வந்தனர். தமிழர் தலைவர் பூங்காவில் நுழைந்ததும் தோழர்கள் "தந்தை பெரியார் வாழ்க!" "அன்னை மணியம்மையார் வாழ்க!" "தமிழர் தலைவர் வீரமணி வாழ்க!" என எழுச்சி முழக்கமிட்டனர்.

பெரியார் தொண்டர் ச. கோவிந்தசாமி அவர்களுக்கும் அவரது இணையர் தையல் நாயகி அம்மாளுக்கும் தமிழர் தலைவர் அவர்கள் அனைவரின் பலத்த கரவோசையோடு சால்வை அணிவித்து மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து எழுபதுக்கும் மேற்பட்ட திராவிட இயக்க முன்னோடிகளுக்கு சால்வை அணிவித்து மாலை அணிவித்தார். பின்னர் தி.மு.க தேர்தல் பணிக்குழு செயலாளர் குத்தாலம் பி.கல்யாணம் தொடக்க உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் குடியரசு தலைவர், பிரதமர், தமிழ்நாடு முதலமைச்சர் ஆகிய மூவருமே பார்ப்பனர்களாக இருந்த நிலையில் தமிழர் தலைவர் அவர்கள் இடஒதுக்கீடு தொடர்பான 31சி சட்டத்தை எப்படி தமிழ்நாட்டில் கொண்டுவர முயற்சி எடுத்தார்கள் என்பதையும், அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்த நேரத்தில் சுயமரியாதை திருமணச்சட்டம் இயற்றப்பட்ட வரலாற்றையும் எடுத்துக் கூறினார். அவரைத் தொடர்ந்து தி.மு.க.மாவட்ட பொறுப்பாளர் நிவேதா எம். முருகன் வாழ்த்துரை வழங்கினார்.

**தமிழர் தலைவர் உரை**

இறுதியாக தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்கள் பாராட்டி சிறப்புரையாற்றினார். அவர் தனது பாராட்டுரையில் பெரியார் தொண்டர் ச.கோவிந்தசாமி அவர்களின் சொந்த ஊரான கொக்கூர் கொள்கைக் கூடாரமாக விளங்கிய வரலாற்றையும், ச.கோவிந்தசாமி அவர்களைப் பற்றியும் சிறப்பாக எடுத்துரைத்தார். விடுதலை ஞாயிறு மலருக்கு இந்த வயதிலும் மிகுந்த நினைவாற்றலோடு அவர் செய்திகளை பகிர்ந்திருப்பதை சுட்டிக்காட்டி பாராட்டு தெரிவித்தார். 1957 சட்ட எரிப்பு போராட்டத்தின்போது கொக்கூரில் சட்ட எரிப்பு போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்களை காவல் துறை கைதுசெய்ய மறுத்ததால் மீண்டும் அவர்கள் குத்தாலம் சென்று சட்டத்தை எரித்து கைதான வீர வரலாற்றை எடுத்துக்கூறி தற்போது திருவாரூரில் பா.ஜ.க பிரமுகர் கல்லூரித் தேர்வில் தேர்ச்சி பெற ஆள் மாறாட்டம் செய்து காவல் துறையால் கைதுசெய்யப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார். விஞ்ஞான அடிப்படையில் சிந்திப்பதுதான் பகுத்தறிவு. எங்கள் தோழர்கள் யாரும் திருக்கடையூர் சென்று சதாபிஷேகம் செய்துகொள்வதில்லை. ஆனால் கடவுள் மறுப்பாளர்களான பலரும் இன்றைக்கும் நூறாண்டை கடந்து தோழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றார். (முழு உரை பின்னர்).

குத்தாலத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் சிலைகளுக்கு தி.மு.க.மாவட்ட பொறுப்பாளர் நிவேதா எம். முருகன், தேர்தல் பணிக்குழு செயலாளர் குத்தாலம் பி.கல்யாணம் மற்றும் மாவட்ட கழக பொறுப்பாளர்கள், தோழர்கள் புடைசூழ தமிழர் தலைவர் மாலை அணிவித்தார்.

தலைவர் வருகைக்கு முன்னர் பெரியார் தொண்டர் ச.கோவிந்தசாமி அவர்களும் அவரது இணையர் தையல் நாயகி அம்மாளும் பிறந்தநாள் கேக் வெட்டினர். அவர்களுக்கு உள்ளூர் பிரமுகர்கள் உறவினர்கள் சால்வை அணிவித்தனர். விடுதலை ஞாயிறு மலரில் வெளிவந்த அவரது பேட்டி துண்டறிக்கையாக அனைவருக்கும் வழங்கப்பட்டது. குத்தாலம் ஒன்றிய செயலாளர் இளமாறன் நன்றி கூறினார்.

கழக பொதுச்செயலாளர் தஞ்சை இரா.ஜெயக்குமார், கழக சொற்பொழிவாளர் அதிரடி அன்பழகன், மாவட்ட துணைச்செயலாளர் அரங்க. நாகரத்தினம், பெரியார் தொண்டர் அ.முத்தையன், மயிலாடுதுறை நகர தலைவர் சீனி.முத்து, செயலாளர் பூ.சி. காமராஜ், ஒன்றிய தலைவர் ஆர்.டி.வி.இளங்கோவன், சீர்காழி ஒன்றிய செயலாளர் கடவாசல் செல்வம், கொள்ளிடம் ஒன்றிய செயலாளர் பூ.பாண்டுரங்கன், மற்றும் திராவிடர் கழக, திராவிட முன்னேற்றகழக பொறுப்பாளர்கள் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## பெரியார் கேட்கும் கேள்வி! (757)



நீதி நேர்மை ஏற்பட வேண்டுமானால் ஒழிக்கப்பட வேண்டிய வக்கீல் முறை இருக்கலாமா?

**- தந்தை பெரியார்,**
'பெரியார் கணினி' - தொகுதி 1, '**மணியோசை**'

## நன்கொடை



திராவிடர் கழக பட்டுக்கோட்டை கழக மாவட்ட துணைத்தலைவர் **சா.சின்னக்கண்ணு** அவர்களின் 90ஆவது பிறந்தநாள் மகிழ்வாக நாகம்மையார் குழந்தைகள் இல்லத்திற்கு ரூபாய் 1000 நன்கொடை வழங்கியுள்ளார். வாழ்த்துகள்! நன்றி!!

## ஏட்டுத் திக்குகளிலிருந்து...

**23.8.2022**

**டெக்கான் கிரானிக்கல், அய்தராபாத்:**

- மதவெறியர்கள் நாட்டை பிளவுபடுத்த நினைக்கிறார்கள்; நாம் அமைதியாக இருக்கக் கூடாது - தெலங்கானா முதலமைச்சர் கே.சந்திரசேகர ராவ்.

**டெக்கான் கிரானிக்கல், சென்னை:**

- ஆதாம் பாலம் எனும் சேது பாலத்தை தேசிய சின்னமாக ஒன்றிய அரசு அறிவிக்க வேண்டும் - சுப்ரமணியன் சாமி.

**.- குடந்தை கருணா**

## புதிய பொறுப்பாளர்கள் நியமனம்

திருவாரூர் நகர திராவிடர் கழகத் தலைவர் **எஸ்.வி.சுரேஷ்**

திருவாரூர் நகர திராவிடர் கழக செயலாளர் **ச.ஆறுமுகம்**

திருவாரூர் மாவட்ட கழக துணை செயலாளர் **கோ.இராமலிங்கம்**

மேற்கண்டவர்கள் பொறுப்பாளர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள்.

**-கலி.பூங்குன்றன்,**
துணைத் தலைவர், திராவிடர் கழகம்
(கழகத் தலைவர் ஆணைப்படி)

## வருந்துகிறோம்



திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு - வெம்பாக்கம் வட்டம், வடமணப்பாக்கத்தைச் சேர்ந்த, தி.மு.க. கிளைக் கழகத் தலைவர் **பி.கே.வெங்கடேசன்** (வயது 77) அவர்கள் உடல் நலக் குறைவால் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் நேற்று (22.8.2022) மாலை 5 மணியளவில் மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இவர் தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற பி.கே.விஜயராகவன் அவர்களின் தம்பியும், செய்யாறு கழக மாவட்ட ப.க. தலைவர் வி.வெங்ட்ராமன் அவர்களின் சிற்றப்பாவும் ஆவார்.

இவருக்கு வெ.தேசம்மாள் என்ற மனைவியும், வெ. கொடிமணிபாரதி என்ற மகளும் உள்ளனர். அன்னாரின் இறுதி நிகழ்வு வடமணப்பாக்கம் கிராமத்தில் இன்று (23.8.2022) மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

## சிதம்பரம் மாவட்டத்தில் பெரியார் 1000

### 24.8.2022 புதன் மாலை 3 மணி

### தேர்வு நடைபெறும் இடங்கள் - பொறுப்பாளர்கள்

அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, பரங்கிப்பேட்டை - பேரா. பூ.சி.இளங்கோவன் (மாவட்டத் தலைவர்), துரை. செயபால் (பரங்கிபேட்டை ஒன்றய செயலாளர்).

ஹலீமா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பரங்கிப்பேட்டை - தலைமையாசிரியர் ஆறு.கலைச்செல்வன்.

அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, புவனகிரி - கோ. நெடுமாறன் (ப.க. மாவட்ட செயலாளர்), கு.தென்னவன் (மேனாள் மாவட்ட அமைப்பாளர்), இராமதாஸ் (புவனகிரி ஒன்றியத் தலைவர்).

ஒன்றிய நடுநிலைப் பள்ளி, புவனகிரி - யாழ்.திலீபன் (மாவட்ட இணைச் செயலாளர்).

மங்களம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, புவனகிரி - முனைவர் ராஜு (பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம்), அ.சுரேஷ் (மாவட்ட இளைஞரணி தலைவர்).

ராமசாமி செட்டியார் மேல்நிலைப் பள்ளி, சிதம்பரம் - இரா.செல்வரத்தினம் (நகர கழக அமைப்பாளர்).

அரசு மேல்நிலைப் பள்ளி, திருமுட்டம் - கோவி. பெரியார்தாசன் (மாவட்ட கழக துணைத் தலைவர்), ஆசிரியர் ச.செங்குட்டுவன் (மாவட்ட ப.க. அமைப்பாளர்).

ஊராட்சி ஒன்றியப் பள்ளி, காவாலகுடி - சிற்பி. சிலம்பரன் (மாவட்ட இளைஞரணி செயலாளர்).

## பகுத்தறிவாளர் கழக தோழர்களுக்கு......

பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பாக மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக பொறுப்பாளர்கள் தாங்கள் சேர்த்த விடுதலை சந்தாக்களுக்குரிய விவரத்தோடு உரிய தொகையை திராவிடர் கழக ஒன்றிய பொறுப்பாளர்களிடமோ அல்லது மாவட்ட பொறுப்பாளர்களிடமோ ஒப்படைத்துவிட்டு விவரத்தை ஒன்றிய பொறுப்பாளர்கள், மாவட்ட பொறுப்பாளர்களிடமும், மாவட்ட பொறுப்பாளர்கள் அதை குறிப்பெடுத்து வைத்துக்கொண்டு மாநில பொதுச்செயலாளர் ஆ.வெங்கடேசன் 9840606428 அவர்களிடம் வாட்ஸ்அப் அல்லது அலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவிக்கும் படியும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்..

இந்த பணியில் மாநில துணைத்தலைவர்கள் தங்கள் பொறுப்பு மாவட்டங்களில் தொடர்புகொண்டு விவரம் சேகரித்து பொதுச்செயலாளர் ஆ.வெங்கடேசன் 98406 06428 அவர்களிடம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

இதை ஒரு முக்கிய பணியாக கருதி செயல்பட வேண்டும்.

இப்பணியை 25.8.2022க்குள் முடித்திட வேண்டுகிறோம்.

**- வி.மோகன்,** 9944994847
பொதுச்செயலாளர்
பகுத்தறிவாளர் கழகம்

## எந்தக் காலகட்டத்திலும் நான் பொறுப்பேற்ற பிறகு ‘விடுதலை’ நாளிதழ் ஒரு நாள்கூட நின்றதே கிடையாது; தவறி நிறுத்தப்பட்டதும் கிடையாது

# கரோனா காலகட்டத்தில் பல லட்சக்கணக்கான மக்களிடம் ‘விடுதலை’ நாளேடு மின்னிதழ்மூலம் கொண்டு செல்லப்பட்டது

## மன்னார்குடி மண்டல கலந்துரையாடல் கூட்டத்தில் தமிழர் தலைவர் ஆசிரியர் உரை

**மன்னார்குடி, ஆக.23** எந்தக் காலகட்டத்திலும் நான் பொறுப்பேற்ற பிறகு ‘விடுதலை’ நாளிதழ் ஒரு நாள்கூட நின்றதே கிடையாது; தவறி நிறுத்தப்பட்டதும் கிடையாது. நாம் விடுமுறை விட்டால்தான் வெளிவராமல் இருந்திருக்கலாம்; கரோனா காலகட்டத்தில் ஒவ்வொரு தோழர்களும் மின்னிதழ்மூலம் 200 பேருக்கு, 300 பேருக்கு அனுப்பினர். பல லட்சக் கணக்கான மக்களை அந்தக் காலகட்டத்தில் வழமைக்கு மாறாக ‘விடுதலை’ சந்தித்தது. இது ‘விடுதலை’யினுடைய சிறப்பாகும் என்றார் திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள்.

### மன்னார்குடியில் நடைபெற்ற கலந்துரையாடல்

கடந்த 13.8.2022 அன்று மாலை 60 ஆயிரம் ‘விடுதலை’ சந்தா திரட்டுவது குறித்து மன்னார்குடியில் நடைபெற்ற மன்னார்குடி, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், கும்பகோணம், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, காரைக்கால் மாவட்டங்களின் திராவிடர் கழக கலந்துரையாடலில் திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் சிறப்புரையாற்றினார். அவரது சிறப்புரை வருமாறு:

### நம் கழகத்தின் பாசமிகு கொள்கை வீரர்களே!

மன்னை மாநகரில் தஞ்சாவூர், திருவாரூர், காரைக்கால் ஆகிய மண்டல திராவிடர் கழகக் கலந்துரையாடல் கூட்டம் மிகச் சிறப்பாக இங்கே தஞ்சை, கும்பகோணம், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, காரைக்கால் மாவட்டங்களுடைய திராவிடர் கழகம், பகுத்தறிவாளர் கழகம், பகுத்தறிவு ஆசிரியரணி, இளைஞரணி, திராவிடர் மாணவர் கழகம், மகளிரணி, தொழிலாளரணி, வழக்குரைஞரணி, மாநில, மண்டல, மாவட்ட, ஒன்றிய நகரப் பொறுப்பாளர்கள் ஆகிய அத்துணை பேரும் கலந்த இந்த சிறப்புமிகுந்த கூட்டத்திற்கு வருகை புரிந்து, அருமையான கருத்துகளை இங்கே எடுத்து வைத்துள்ள ‘விடுதலை’ சந்தா திரட்டல் என்ற பணிக்கு, ஓய்வறியாத உழைப்புத் தேனீக்களாக தங்களை ஆக்கிக்கொண்டுள்ள, நம்முடைய கழகத்தின் பாசமிகு கொள்கை வீரர்களே!

### பழைய தஞ்சை மாவட்டத்தினுடைய ஒருங்கிணைந்த ஒரு கூட்டம்தான் இந்தக் கலந்துரையாடல்!

கழகப் பொதுச்செயலாளர் தோழர் ஜெயக்குமார் அவர்களே, மாநில அமைப்பாளர் குணசேகரன் அவர்களே, அமைப்புச் செயலாளர் ஊமை.ஜெயராமன் அவர்களே, தஞ்சை மண்டல தலைவர் அய்யனார் அவர்களே, செயலாளர் குருசாமி அவர்களே, திருவாரூர் மண்டலத் தலைவர் முருகையன் அவர்களே, மண்டல செயலாளர் கிருஷ்ணமூர்த்தி அவர்களே, மன்னார்குடி மாவட்டத் தலைவர் ஆர்.பி.எஸ்.சித்தார்த்தன் அவர்களே, செயலாளர் கணேசன் அவர்களே, தஞ்சை மாவட்டத் தலைவர் தோழர் வழக்குரைஞர் அமர்சிங் அவர்களே, செயலாளர் தோழர் வழக்குரைஞர் அருணகிரி அவர்களே, திருவாரூர் மாவட்டத் தலைவர் தோழர் மோகன் அவர்களே, செயலாளர் வீர.கோவிந்தராசு அவர்களே, நாகை மாவட்டத் தலைவர் வி.எஸ்.டி.ஏ. நெப்போலியன் அவர்களே, செயலாளர் பூபேஷ்குப்தா அவர்களே, குடந்தை மாவட்ட செயலாளர் உள்ளிக்கடை துரைராசு அவர்களே, பட்டுக் கோட்டை மாவட்டச் செயலாளர் பேராவூரணி தோழர் சிதம்பரம் அவர்களே, மயிலாடுதுறை மாவட்டத் தலைவர் தோழர் குணசேகரன் அவர்களே, மாவட்டச் செயலாளர் தோழர் தளபதி ராஜ் அவர்களே, மண்டல மகளிரணி செயலாளர் தோழர் கலைச்செல்வி அவர்களே,

கிராமப் பிரச்சாரக் குழு மாநில அமைப்பாளர் முனைவர் அதிரடி அன்பழகன் அவர்களே, மாநில இளைஞரணியின் துணைச் செயலாளர் தோழர் வெற்றிக்குமார் அவர்களே, மாநில மாணவர் கழக அமைப்பாளர் செந்தூரபாண்டியன் அவர்களே, மண்டல இளைஞரணி செயலாளர் முனைவர் இராஜவேல் அவர்களே, பெரியார் வீர விளையாட்டுக் கழக செயலாளர் தோழர் இராமகிருஷ்ணன் அவர்களே,

தஞ்சை மண்டல பகுத்தறிவு ஆசிரியரணி அமைப்பாளர் கணேஷ் அவர்களே, திருவாரூர் மண்டல இளைஞரணி செயலாளர் நாத்திக.பொன்முடி அவர்களே, கழகப் பேச்சாளர் தோழர் இராம.அன்பழகன் அவர்களே, மாநில விவசாயத் தொழிலாளரணி செயலாளர் தோழர் குடவாசல் வீரைய்யன் அவர்களே, திருவாரூர் மண்டல மகளிரணி செயலாளர் மகேஷ்வரி அவர்களே,

மற்றும் இயக்கப் பொறுப்பாளர்களே, இயக்கக் குடும்பத்தவர்களே, செயல்வீரர்களே உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.




பழையதஞ்சைமாவட்டத்தினுடையஒருங்கிணைந்த ஒரு கூட்டம்தான் இந்தக் கலந்துரையாடல் என்பதாகும்.

### பெரிய கருத்தரங்கம் போன்று- பெரிய மாநாடு போன்று கலந்துரையாடல்

இன்றைக்கு அரசியல் ரீதியாக மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு இருந்தாலும்கூட, நாம் ஒன்றான இந்த உணர்வோடு உங்களையெல்லாம் சந்திக்கின்றபொழுது, இந்தக் கலந்துரையாடலே ஒரு பெரிய மாநாடு போன்று, ஒரு பெரிய கருத்தரங்கம் போன்று இந்த மண்டலத்தில் நம்முடைய சித்தார்த்தன் மற்றும் மன்னார்குடி பொறுப் பாளர்கள், தோழர்கள் இந்த ஊரே வியக்கத்தக்க வகையில் வழிநெடுகிலும் கழகக் கொடிகள், விளம்பரப் பதாகைகளை வைத்திருக்கிறார்கள்.

நாம் கலந்துரையாடலுக்குத்தானே செல்கிறோம்; அங்கே சென்று நம்முடைய தோழர்களை சந்தித்துவிட்டுத்தான் திரும்புவோம் என்று நினைத்தேன்.

நன்றாக விளம்பரப்படுத்தவேண்டும் என்றுதான் நான் ஆர்.பி.எஸ். அவர்களிடம் சொன்னேன். ஆனால், இங்கே இவ்வளவு பெரிய ஏற்பாடு செய்திருக்கிறார்கள்; பொதுக்கூட்டமாகவே ஏற்பாடு செய்திருந்தால், நான் உரையாற்றிவிட்டுச் சென்றிருப்பேன் என்ற நிலை.

இவ்வளவு சிறப்பாக, மகிழ்ச்சியோடு ஏற்பாடு செய்த தோழர்களுக்குப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடுமையாக உழைத்து, மேலும் இலக்கை நோக்கிச் செல்லவேண்டும். இடையில் 10 நாள்கள்தான் உள்ளன. வெண்ணெய்த் திரண்டு வருகின்ற நேரத்தில், அதனை நெய்யாக்கவேண்டும் என்பதுதான் மிகவும் முக்கியம்.

இந்த 10 நாள்கள், கடுமையாக உழைக்கவேண்டும்; நம்முடைய உழைப்பினுடைய அறுவடை நாள். அறுவடை செய்ததை களத்துமேட்டுக்குக் கொண்டு வர வேண்டிய பொறுப்பு நமக்கு உண்டு.

மாவட்டத் தோழர்கள் இடையே நல்ல ஆரோக்கியமான போட்டி இருக்கிறது.

### நாகை மாவட்டத்தை நன்றாகப் பக்குவப்படுத்தி இருக்கிறார்கள் தோழர்கள்!

மற்ற மாவட்டங்களைவிட, பிரிந்த மாவட்டங்களில், நாகை மாவட்டத்தைப்பற்றி கொஞ்சம் கவலையிருந்தது. என்ன கவலை என்றால், நாகை மாவட்டத்தை சில மாதங்களுக்கு முன்புவரையில், திராவிட இயக்கத்தை விட்டு, அம்மாவட்டம் கொஞ்சம் நகர்ந்துகொண்டு போய்க்கொண்டே இருந்தது. காவி மண்ணாக நாகை மாவட்டத்தை ஆக்குவதற்குக் கடுமையான முயற்சிகளை இன எதிரிகள் செய்தனர்.

ஆனால், நம்முடைய தோழர்கள் நெப்போலியன், பூபேஷ்குப்தா போன்றவர்கள் ஒருங்கிணைந்து, ஒருமனதோடு பணியாற்றிக் கூடியவர்கள் வந்தவுடன், நாகை மாவட்டத்தில் எந்த அரசியல் கட்சியும் திராவிடர் கழகத்தோடு இணைந்து செயல்பட்டால்தான், அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அவர்கள் அந்த மாவட்டத்தை நன்றாகப் பக்குவப்படுத்தி இருக்கிறார்கள்.

திருவாரூர் மாவட்டம், வழக்கமாக வரும். பல காரணங்களால், ஒரு சோர்வு தட்டியிருக்கிறது. விவசாய அணி - நமக்கு சிறப்பாக இயங்குகின்ற பகுதி அது.

கிழக்குத் தஞ்சை என்று சொன்னால், திருவாரூர், நாகை மாவட்டம், கீழத்தஞ்சை மாவட்டம் போன்ற ஊர்களிலும், கிராமங்களிலும் இயக்கத் தோழர்கள் இருந்தனர். அதை மீண்டும் புதுப்பிக்கவேண்டும்.

தோழர் மகேஷ்வரி அவர்கள் இங்கே சொன்னார்கள். கிராமத்தில்தான் அவர்கள் இருக்கிறார்கள். இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில், எல்லா கிராமங்களுக்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அவர்கள் அத்தனை பேரையும் சந்திப்பேன்.

அதன்மூலமாக ஒரு பெரிய வாய்ப்பு, மகிழ்ச்சி நமக்கு ஏற்படும். நம்முடைய உறவுகள் என்பது இதுதான்.

### உங்கள் அனைவருக்கும் என்னுடைய தலைதாழ்ந்த நன்றி!

அருமையான முயற்சியை எடுத்து, இலக்கை நாங்கள் முடித்துக்கொடுப்போம்; இலக்கையும் தாண்டுவோம் என்ற அருமையான உறுதிமொழியைச் சொல்லி, அதற்கு முதல் தவணை - இரண்டாம் தவணை என்று வைத்திருக்கிறார்கள். அடுத்து வருவதுதான் கடைசி தவணை என்பது மிகவும் முக்கியம்.

அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, சந்தாக்களைக் கொடுக்கவிருக்கும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய தலைதாழ்ந்த நன்றியை, மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த அன்பைக் காட்டி என்னை நீங்கள் வாழ வைக்கின்றீர்கள் என்று சொல்லும்பொழுது, ஒன்றை நம்முடைய குணசேகரன் அவர்களும், ஜெயக்குமார் அவர்களும், ஊமை.ஜெயராமன் அவர்களும் சொன்னார்கள்.

### பெரியார் தொண்டனாக என்னை சிறுவயதிலேயே ஒப்படைத்துக் கொண்டேன்

88 ஆண்டு ‘விடுதலை’க்கு 60 ஆண்டுகள் ஆசிரியராக இருந்து வருகிறேன் என்பதற்காக நன்றி செலுத்துகிறோம் என்று சொன்னார்கள். நான் அதில் ஒரு திருத்தம் சொன்னேன். 60 ஆண்டுகளுக்கு முன்பு அய்யா அவர்கள் என்னை அழைத்தார்; நான் அந்தப் பணிக்குப் பொறுப்பேற்றுக் கொண்டேன். பெரியார் தொண்டனாக என்னை சிறுவயதிலேயே ஒப்படைத்துக் கொண்டேன். அய்யா அவர்கள் என்ன சொன்னாலும் கேட்பேன்; என்னுடைய குடும்பத்தினரும் அப்படியே.

நான் எவ்வளவு முக்கியமோ, அதேபோன்று என்னுடைய துணைவியாரும் ஒத்துழைப்புத் தரக் கூடிய அளவிற்கு இருந்தார்கள். அதன்படி முடிவெடுத்தோம்.

### மரணம் ஒன்றுதான் பிரிக்குமே தவிர, வேறொன்றும் பிரிக்காது!

ஆகவே, எந்தப் பிரச்சினையும் இல்லை; மகிழ்ச்சியாக இருக்கிறோம். அதை நான் ஒரு பெரிய சாதனையாக நினைக்கவில்லை.

‘விடுதலை’யும் என்னை விட்டுப் போகப் போவதில்லை - ‘விடுதலை’யை விட்டு நானும் போகப் போவதில்லை. மரணம் ஒன்றுதான் பிரிக்குமே தவிர, வேறொன்றும் பிரிக்காது.

திராவிடர் கழகத்திற்குக்கூட அடுத்த தலைமுறை என்று நான் சொல்வேன். ஆனால், ‘விடுதலை’யைப் பொறுத்தவரையில், நான்தான் நிரந்தர ஆசிரியர் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அதைத் தூக்கி நிறுத்தவேண்டும்.

### நம்முடைய மகிழ்ச்சிக்காக அல்ல - எதிரிகளுடைய மிரட்சிக்காக!

‘இல்லந்தோறும் விடுதலை’ என்பதைப் பார்த்து மகிழவேண்டும். அது நம்முடைய மகிழ்ச்சிக்காக அல்ல - எதிரிகளுடைய மிரட்சிக்காக அது மிகவும் முக்கியம்.

அந்த எதிரிகள், ஒரு நோய்க் கிருமி ஊடுருவுவதைப் போல, காவிக் கிருமிகள் இப்போது வேகமாக நாட்டில் பரவிக் கொண்டிருக்கின்றன. அதற்கு ஒரு நல்ல தடுப்பூசி எது என்று சொன்னால், ‘விடுதலை’ என்ற ஆயும்தான்.

எனவே, ‘விடுதலை’க்கு சந்தா சேருங்கள் என்று சொல்வது இருக்கிறதே, அது ‘விடுதலை’க்கு பணம் சேர்ப்பதற்கு அல்ல; அல்லது நமக்குப் பெருமை சேர்ப்பதற்காக அல்ல. அல்லது எனக்கு நன்றி சொல்லவோ, பாராட்டு சொல்லவோ அல்ல.

யார் பாராட்டினாலும், ‘விடுதலை’யில்தான் இருக்கப் போகிறேன்; யார் எதிர்த்தாலும் ‘விடுதலை’யில்தான் இருக்கப் போகிறேன்.

நாளைக்கு சிறைச்சாலைக்கு அனுப்பினாலும், அப்போதும் ‘விடுதலை’யில்தான் இருப்பேன்.

ஆனால், ‘விடுதலை’க்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு.

இதை நம்மவர்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. அதை அறிந்தவர்கள் நீங்கள். இருந்தாலும் அதை நினைவூட்டுவதற்காக சொல்கிறேன்.

### ‘விடுதலை’ நாளிதழ் ஒரு நாள்கூட நின்றதே கிடையாது; தவறி நிறுத்தப்பட்டதே கிடையாது

எந்தக் காலகட்டத்திலும் நான் பொறுப்பேற்ற பிறகு ‘விடுதலை’ நாளிதழ் ஒரு நாள்கூட நின்றதே கிடையாது; தவறி நிறுத்தப்பட்டதே கிடையாது. நாம் விடுமுறை விட்டால்தான் வெளிவராமல் இருந்திருக்கலாம்.

நெருக்கடி காலத்தில் நான் மிசாவில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் இருந்தேன். அன்னை மணியம்மையார் அவர்கள் உடல்நலக் குறைவோடு இருந்தாலும், அந்தக் காலகட்டத்தில் ‘விடுதலை’யை தொடர்ந்து நடத்தினார். இன்றைய ‘விடுதலை’ நிர்வாக ஆசிரியர் அன்றைக்கு அரசு ஊழியராக இருந்தார்; கீழ்வேளூர் பக்கத்தில்தான் இருந்தவர்; மயிலாடுதுறையை சார்ந்த கலி.பூங்குன்றன். அவர் தன்னுடைய வாழ்க்கையை துச்சமென மதித்து, நெருக்கடி காலகட்டத்தில் பலர் பெரியார் திடலுக்கே வருவதற்கு அஞ்சிய நேரத்தில், அம்மா மணியம்மையார் அவர்களுடைய மன உறுதிகொண்ட தலைமை - பூங்குன்றன் போன்ற தோழர்கள், புகைப்பட நிபுணர் குருசாமி, சுந்தரப்பெருமாள் கோவில்தான் அவருடைய சொந்த ஊர். நன்னிலம் போன்ற பகுதிகளில் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றியவர். அரசு ஊழியராக இருந்த அவருடைய பணி நெருக்கடி காலத்தில் போயிற்று.

அப்படிப்பட்டவர்கள் எல்லாம் அன்னையாரோடு ஒத்துழைத்து, ‘விடுதலை’ நாளேடு வெளிவந்தது.

‘விடுதலை’, ‘முரசொலி’தான் நெருக்கடி காலகட்டத்தில் மிகப்பெரிய அளவிற்குத் தாக்குதலுக்குள்ளான பத்திரிகைகள். அதற்குப் பிறகு ‘தீக்கதிர்’ நாளேடு. ‘தினமணி’, ‘எக்ஸ்பிரஸ்’ போன்ற நாளேடுகள் கோயங்கா நெருக்கடி நிலையை எதிர்த்ததால், அவர்களுக்கும் அந்த நெருக்கடி இருந்தது. பத்திரிகை சுதந்திரம் இப்படித்தான் இருந்தது.

### ‘விடுதலை’யினுடைய சிறப்பு

அதற்கடுத்து உங்களுக்கெல்லாம் தெரியும். கோவிட் தொற்று காலகட்டத்தில் பெரிய பெரிய பத்திரிகைகள் எல்லாம் நிறுத்தப்பட்டன. ஆனால், நம்முடைய ‘விடுதலை’ நாளேடு ஒரு நாள்கூட நிறுத்தப்படவில்லை. பத்திரிகையினுடைய பக்கம்தான் குறைந்தது. அதுமட்டுமல்ல, சந்தாக்களே நாம் வாங்கவில்லை. நான்கு பக்கங்களில் ‘விடுதலை’ நாளேடு நாடெங்கும் சென்றது. ஒவ்வொரு தோழர்களும் மின்னிதழ்மூலம் 200 பேருக்கு, 300 பேருக்கு அனுப்பினர். பல லட்சக்கணக்கான மக்களை அந்தக் காலகட்டத்தில் வழமைக்கு மாறாக ‘விடுதலை’ சந்தித்தது. இது ‘விடுதலை’யினுடைய சிறப்பாகும்.

அதுமட்டுமல்ல, சில பத்திரிகைகள் விளம்பரத்திலே வாழ்கின்றன. ஆனால், நம்முடைய ‘விடுதலை’ நாளேடு விளம்பரம் இல்லாமல்தான் வெளிவருகிறது. நம்முடைய நாளேட்டில் கவர்ச்சிகரமான படங்களைப் போடுவதில்லை. பரபரப்பான செய்திகளை வெளியிடுவதில்லை. ஜோதிடம், திரைப்படம் போன்ற போதைப் பொருள்களை நாம் பரப்புவதில்லை.

கொள்கை, லட்சியம், திராவிட இனத்தினுடைய மான மீட்பு, பாதுகாப்பு, ஒரு ‘திராவிட மாடல்’ ஆட்சி ஏற்பட்டு இருக்கின்றது என்றால், கண்ணை இமை காப்பதைப்போல, காக்கின்ற மிகப்பெரிய பணிதான் ‘விடுதலை’யினுடைய பணிகளாகும்.

### தந்தை பெரியார் என்ற அறிவாயுதம் தயாரித்த போராயுதம் ‘விடுதலை’ நாளேடு!

எனவே, ‘விடுதலை’ நாளேடு நாடெங்கும் பரவ வேண்டும். முன்பு எந்தக் காலகட்டத்திலும் ‘விடுதலை’ தேவைப்பட்டது என்றாலும், தற்போது நம்முடைய எதிரிகளுக்குப் பதில் சொல்வதற்கு மிகவும் அவசியப்படுவது தந்தை பெரியார் என்ற அறிவாயுதம் தயாரித்த போராயுதமான ‘விடுதலை’ நாளேடு ஆகும்.

(தொடரும்)

# வெளி நாடுகளில் 5 பல்கலைக்கழகங்களில் விரைவில் தமிழ் இருக்கை - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை,ஆக.23** இந்தோனேசியா, வியட்நாம் உள்ளிட்ட 5 தெற்காசிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் விரைவில் தமிழ் இருக்கை அமைக்கப்படும் என செம்மொழித் தமிழ் விருது வழங்கும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

மறைந்த மேனாள் முதலமைச்சர் கலைஞரின் வலியுறுத்தலின் பேரில் ஒன்றிய அரசால் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அமைக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் தலைவராக தமிழ்நாடு முதலமைச்சர் உள்ளார். கடந்த 2008இல் முத்தமிழறிஞர் கலைஞர் தனது சொந்த நிதி ரூ.1 கோடியை வைப்புத் தொகையாக அளித்து, கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி தமிழாய்வு அறக்கட்டளையை நிறுவினார். இந்த அறக்கட்டளை சார்பில் ஆண்டுதோறும் 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது, ஆசியாவிலேயே மிக உயர்ந்த வகையில் ரூ.10 லட்சம் பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் அடங்கியது. தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், இலக்கியம்,மொழியியல், படைப்பிலக்கியம், இலக்கிய திறனாய்வு, மொழிபெயர்ப்பு, நுண்கலைகள் ஆகிய துறைகளில்சிறந்த பங்களிப்பை வழங்கிய ஆய்வாளருக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2009 ஆம் ஆண்டில் முதல் நபராக பின்லாந்து அறிஞர் அஸ்கோ பர்ப்போலோவுக்கு விருது அறிவிக்கப்பட்டது. அவருக்கு 2010இல் கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் விருது வழங்கப்பட்டது. அதன்பின், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில் விருதுகள் வழங்கப்படவில்லை.




கடந்த ஆண்டு திமுக ஆட்சி அமைந்த பிறகு செம்மொழித் தமிழ் விருதை தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, கடந்த ஜன. 22 ஆம் தேதி நடந்த விழாவில்,2010 முதல் 2019 வரையிலான 10 ஆண்டுகளுக்கான விருதை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்வழங்கினார். அதைத் தொடர்ந்து, 2020 ஆம் ஆண்டுக்கு தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் ம.ராசேந்திரன், 2021க்கு மேனாள் தமிழ் பேராசிரியர் க.நெடுஞ்செழியன், 2022க்கு பிரான்ஸ் நாட்டு ஆராய்ச்சியாளர் ழான் லூயிக் செவ்வியார் ஆகியோருக்கு விருது அறிவிக்கப்பட்டிருந்தது.இந்த 3 ஆண்டுகளுக்கான விருது வழங்கும் விழா, சென்னை பெரும்பாக்கத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனவளாகத்தில் நேற்று (22.8.2022) நடந்தது. ம.ராசேந்திரன், க.நெடுஞ்செழியன் ஆகியோருக்கு விருதுக்கான தொகை தலா ரூ.10 லட்சம், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கலைஞரின் சிலையைமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். பிரான்சு நாட்டு அறிஞர் ழான் லாயிக் செவ்வியார் வெளிநாட்டில் இருந்து வர இயலாத காரணத்தால் அவருக்கு பின்னர் விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில், உயர்தனி செம்மொழி முன்மொழிந்த மூதறிஞர்கள், சங்ககால மக்கட் பெயர்க் களஞ்சியம், தமிழ்நாட்டில் சமணம் என்பது உள்ளிட்ட16 நூல்களையும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார். பின்னர் அவர் பேசியதாவது: இன்று சென்னையின் 383ஆம் ஆண்டு பிறந்தநாள். சென்னை மேயராக நான் இருந்த போதுதான், 'மதராஸ்' என்ற பெயரை 'சென்னை' என அப்போதைய முதலமைச்சர் கலைஞர் மாற்றினார். தமிழர் வாழும் இந்த நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டியதும், 'மெட்ராஸ்' என்றழைக்கப்பட்ட தலைநகருக்கு 'சென்னை' என்று பெயர் சூட்டியதும், தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுத் தந்ததும் திமுக அரசுதான்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், 41 செவ்வியல் தமிழ் நூல்களின் ஆய்வுக்கு முதலிடம் வழங்குகிறது. செம்மொழித்தமிழின் தொன்மையையும் தனித்தன்மையையும் அவற்றின் மரபுத் தொடர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்துக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்துதர தமிழ்நாடு அரசு தயாராக உள்ளது. ஏனென்றால் இன்று நடப்பது தமிழின் ஆட்சி, தமிழின ஆட்சி. கடந்த ஆண்டு நடந்த விழாவில், வெளியிட்ட அறிவிப்புகளின்படி செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அமைந்துள்ள சாலையை 'செம்மொழிச் சாலை' என பெயர் மாற்றம் செய்து நமது அரசு செயல்படுத்தியுள்ளது.

புகழ்பெற்ற வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் செவ்வியல் தமிழ் இருக்கைகள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மூலம் அமைக்கப்படும் என்று அறிவித்தேன். அதற்கான பணிகள் நடந்து வருகின்றன. முதல்கட்டமாக, ரீயூனியன் டி லா ரீயூனியன் பல்கலைக்கழகம், இந்தோனேசியா சுமத்ரா உத்தாரா பல்கலைக்கழகம், கம்போடியா கெமர் மொழிகள் ஆய்வு மையம், வியட்நாம் மொழிகள் மற்றும் பன்னாட்டு ஆய்வியல் பல்கலைக்கழகம், தாய்லாந்து சுலாலோங்கோர்ன் பல்கலைக்கழகம் ஆகிய தெற்காசியாவில் உள்ள 5 பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கைகள் விரைவில் ஏற்படுத்தப்படும். தமிழ் மொழிக்கும். உலக மொழிகளுக்கும் இடையிலான உறவை, தொடர்பை ஆணித்தரமாக நிறுவ வேண்டியது காலத்தின் தேவை. இத்தேவையை தமிழ் இருக்கைகள் மூலம் மேற்கொள்ள வழிவகை ஏற்படும். மறைந்த மேனாள் முதலமைச்சர் கலைஞரின் கனவை நிறைவேற்றவே, முதலமைச்சர் பொறுப்பில் நாளும் உழைத்து வருகிறேன். அதைவிடப் பெரிய பெருமையோ, கடமையோ எனக்கு வேறு எதுவும் இருக்க முடியாது.

தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல திட்டங்களை செம்மொழி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. செம்மொழி நிறுவனம் முன்வைத்துள்ள இலக்குகளை அடைய தமிழ்நாடு அரசு எப்போதும் துணை நிற்கும். இவ்வாறு முதலமைச்சர் பேசினார். விழாவில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மா.சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், தமிழ் வளர்ச்சித் துறை செயலர் மகேசன் காசிராஜன், செய்தித்துறை இயக்குநர் வீ.ப.ஜெயசீலன், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன துணைத் தலைவர் இ.சுந்தரமூர்த்தி, இயக்குநர் இரா.சந்திரசேகரன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ந.அருள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# 6 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்க ஒன்றிய அமைச்சரிடம் வலியுறுத்தவுள்ளோம் : அமைச்சர் மா.சுப்பிரமணியன்

**வேலூர், ஆக.23** தமிழ்நாட்டில் ஆறு மாவட்டங்களில் புதிதாக மருத்துவக்கல்லூரி தொடங்க ஒன்றிய அமைச்சரை சந்தித்து வலியுறுத்த உள்ளோம் என்று நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மதுரை எய்ம்ஸ் கட்டுமானப் பணிகள், கோவையில் புதிய எய்ம்ஸ் மருத்துவமனை மற்றும் புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களில் 6 புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைப்பது குறித்து இந்த வாரம் ஒன்றிய நல்வாழ்வு துறை அமைச்சரை நேரில் சந்தித்து பேச இருப்பதாகவும், காலியாக உள்ள 4,308 பணியிடங்கள் எம்ஆர்பி மூலம் வரும் அக்டோபர் இறுதிக்குள் நிரப்பப் படும் எனவும் தமிழ்நாடு நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.



வேலூரில் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் 21.8.2022இல் கூறியதாவது, "கரோனா தடுப்பூசி செலுத்துவதில் வேலூர் மாவட்டம் தன்னிறைவு பெற்ற மாவட்டமாக உள்ளது. மாநிலம் முழுவதும் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் பணிகள் விரைவு படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரை 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதல் தவணை 96.99%, 2ஆவது தவணை 89.5% செலுத்தப்பட்டுள்ளது. 3.50 கோடி நபர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்த வேண்டியுள்ளது.

இந்த வாரம் நானும், துறை செயலாளரும் டில்லி சென்று ஒன்றிய நல்வாழ்வுத் துறை அமைச் சரை சந்திக்க உள்ளோம். அப்போது மதுரை எய்ம்ஸ் கட்டுமான பணிகள், கோவையில் புதிய எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்து பேச உள்ளோம். அதேபோல, திருப்பத்தூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், மயிலாடுதுறை, தென்காசி, பெரம்பலூர், காஞ்சிபுரம் ஆகிய 6 மாவட்டத்துக்கு புதிய மருத்துவக்கல்லூரி அமைக்கவும், கூடுதல் தடுப்பூசி தமிழ்நாட்டுக்கு கேட்க உள்ளோம்.

தமிழ்நாடு மருத்துவத்துறையில் காலியாக உள்ள 4,308 பணியிடங்கள் வரும் அக்டோபர் மாதம் இறுதிக்குள் எம்ஆர்பி மூலம் நிரப்படும். வேலூர் பழைய அரசு மருத்துவமனை (பென்லேண்ட்) தரம் உயர்த்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் கேட்டுக்கொண்டதற்கிணங்க காட்பாடியில் பல்நோக்கு மருத்துவமனை கட்ட 30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கான இடம் தேர்வு பணிகள் முடிந்த பிறகு அடுத்தக்கட்ட பணிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கேரளாவையொட்டி 13 இடங்களில் தொடர் கண்காணிப்பு நடத்தப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் சுவிட்சர்லாந்தில் நடைபெறும் பன்னாட்டு மருத்துவ மாநாட்டில் ஒன்றிய அமைச்சரோடு தமிழ்நாடு அமைச்சருமான நானும் கலந்துகொள்கிறேன். அதில் உலகத்துக்கே முன் மாதிரியாக உள்ள வீடு தேடி மருத்துவ திட்டம் குறித்து ஆவணப்படுத்த உள்ளோம்.

இல்லம் தேடி மருத்துவம் திட்டத்தில் 85 லட்சத்து 36 ஆயிரத்து 501 பேர் இதுவரை பயன் பெற்றுள்ளனர். இந்த திட்டம் உலகத்துக்கே முன்மாதிரியான உள்ளது. துணை சுகாதார நிலையங்கள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு மருத்துவர்கள் பணியமர்த்த பாலிகிளினிக் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. சத்துவாச்சாரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தினமும் மாலை 4.30 மணி முதல் 5.30 மணிவரை ஒவ்வொரு சிறப்பு மருத்துவர்கள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட உள்ளன. இது தொடர்பான தகவல் அறிவிப்பு பலகையில் இடம் பெறும். அதை பார்த்து பொதுமக்கள் தங்களுக்கு தேவைப்படும் சிகிச்சையை எடுத்துக்கொள்ளலாம் என்றார் அவர்.

இதைதொடர்ந்து, திருப்பத்தூர் மாவட்டத்தில் ஆம்பூர், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற மெகா தடுப்பூசியை முகாமை சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் தொடங்கிவைத்தார்.

## ஜிஎஸ்டியால் விபரீதம் பம்ப்செட் விற்பனை பெரும் சரிவு




**கோவை, ஆக.** 23 ஜிஎஸ்டி வரி உயர்வு, மூலப்பொருள் விலை உயர்வால் வீடுமற்றும் விவசாய பயன்பாட்டுக்கான பம்ப்செட் விற்பனை 50 சதவீதம் குறைந்துள்ளது என கோவை தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர்.

தொழில் நகரான கோவை, பம்ப்செட் உற்பத்தியில் உலகளவில் சிறந்து விளங்குகிறது. இந்தியா முழுவதும் வீடு மற்றும் விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் பம்ப்செட்களில் 55 சதவீதம் கோவையிலுள்ள தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பம்ப்செட்கள் ஆகும்.

கோவையில் 500-க்கும் மேற்பட்ட பம்ப்செட் தயாரிக்கும் நிறுவனங்களும், ஆயிரத்துக்கும் அதிகமான உதிரிபாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்களும் செயல்படுகின்றன. ஒரு லட்சம் பேர் இத்தொழிலில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

0.5 எச்.பி(குதிரை திறன்) முதல் அதிகபட்சமாக 50 எச்.பி. மற்றும் அதற்கு மேல் திறன்கொண்ட பம்ப்செட்கள் கோவையில் உள்ள தொழில் நிறுவனங்களில் தயாரிக்கப்படுகின்றன. ரூ.1,500 முதல் ரூ.4.5 லட்சம் வரை பம்ப்செட் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

பம்ப்செட் விலை அதிகரித்துள்ளதால், விற்பனை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர். தென்னிந்திய பொறியியல் உற்பத்தியாளர்கள் சங்க (சீமா) தலைவர் விக்னேஷ் கூறியதாவது: பம்ப்செட் உற்பத்தி செலவு கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 40 சதவீதம் உயர்ந்துள்ளது. தற்போது இந்தியா முழுவதும் போர்வெல் பம்ப்செட் விற்பனை தான் அதிகம் உள்ளது.

கடந்த ஜூலையில் பம்ப்செட்களுக்கு விதிக்கப்பட்ட ஜிஎஸ்டி வரி 12 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக உயர்த்தப்பட்டது. இதனால் ஏற்கெனவே விலை 40 சதவீதம் உயர்ந்த நிலையில் தற்போது 6 சதவீதம் சேர்த்து 46 சதவீதமாக விலை உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு காரணமாக நாடு முழுவதும் வீடு மற்றும் விவசாய பயன்பாட்டுக்கான பம்ப்செட் விற்பனை 50 சதவீதம் குறைந்துள்ளது. சரக்கு சேவை வரி குறைப்பு, நியாயமான விலையில் உதிரிபாகங்கள் உள்ளிட்டவற்றை அரசு உறுதி செய்தால் நெருக்கடியிலிருந்து இத்தொழில் மீண்டு வர உதவும் என்றார்.

கோவை பம்ப்செட் மற்றும் உதிரிபாகங்கள் விற்பனையாளர்கள் சங்க (கோப்மா) தலைவர் மணிராஜ் கூறும்போது, "பம்ப்செட் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதற்கு மூலப்பொருட்கள் விலை உயர்வு முக்கிய காரணமாகும். காப்பர் விலை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக அதிகரித்தது. தற்போது 900 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

எங்களை போன்ற நிறுவனங்கள் விலை ஏற்றினால் வாடிக்கையாளர்கள் பெரிய நிறுவனங்களின் பம்ப்செட்களை வாங்கிச் சென்று விடுகின்றனர். மூலப்பொருட்கள் விலையை குறைக்க வேண்டும். ஜிஎஸ்டியை மீண்டும் 12 சதவீதமாக மாற்ற வேண்டும்" என்றார்.

## ஆதி திராவிடர், பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுதிட்டம்: வருமான உச்சவரம்பு ரூ.3 லட்சமாக உயர்வு

**சென்னை, ஆக.** 23 ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்துக்கான வருமான உச்சவரம்பு ரூ. 2 லட்சத்திலிருந்து ரூ. 3 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து அரசாணையில் கூறியிருப்பதாவது:

தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்துக்கு இதற்கு முன்னர் குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 2 லட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டது. அதிக எண்ணிக்கையிலான நபர்கள் பயனடையும் வகையில், தற்போது நடைமுறையில் உள்ள குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ. 3 லட்சமாக உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பொருளாதார மேம்பாடு அடைந்து சமுதாய சமநிலைக்கு உதவும் என்றும், இவ்வாறு ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ. 2 லட்சத்திலிருந்துரூ.3லட்சமாகஉயர்த்துவதால், பி.எம்.ஏ.ஜெ.ஏ.ஒய். திட்டத்தில் உள்ள ஆண்டு உச்சவரம்புக்கு இணையாக இருக்கும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## இலங்கை கடற்படையினர் அட்டூழியம்
# தமிழ்நாட்டு மீனவர்கள் சிறைபிடிப்பு

**நாகை, ஆக.23** எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி நாகை, மயிலாடுதுறை மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் 10 பேரை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து சென்றனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள், கடலில் மீன்பிடிக்கும்போது இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி சிறைபிடிக்கும் சம்பவம் அடிக்கடி நடந்து வருகிறது. கடந்த 10ஆம் தேதி நடுக்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த நாகை மீனவர்கள் 9 பேரை இலங்கை கடற்படையினர் சிறை பிடித்து சென்றனர். இந்த பரபரப்பு அடங்குவதற்குள் மீண்டும் நாகை, மயிலாடுதுறை மீனவர்கள் 10 பேரை இலங்கை கடற்படையினர் சிறை பிடித்து சென்ற சம்பவம் மீனவர்கள் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



### 10 மீனவர்கள் சிறைபிடிப்பு

நாகை அக்கரைப்பேட்டையை சேர்ந்தவர் கலையரசன்(வயது 40). இவருக்கு சொந்தமான விசைப்படகில் இவரும், அக்கரைப்பேட்டையை சேர்ந்த சஞ்சிகண்ணு, ஆனந்த், கமலநாதன், ராஜா மற்றும் மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகாரை சேர்ந்த ஆகாஷ், ரீகன், பிரவீன் ஆகியோர் உள்பட 10 மீனவர்கள் நாகை அக்கரைப்பேட்டை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடந்த 20ஆம் தேதியன்று விசைப்படகில் மீன்பிடிக்க சென்றனர்.

இவர்கள், கோடியக்கரைக்கு தென்கிழக்கே முல்லைத்தீவு அருகே நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டு இருந்தனர். அப்போது அங்கு ரோந்துப் பணியில் ஈடுபட்டு இருந்த இலங்கை கடற்படையினர், எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி நாகை, மயிலாடுதுறையை சேர்ந்த 10 மீனவர்களையும் சிறைபிடித்தனர். பின்னர் மீனவர்களை கைது செய்ததுடன், அவர்கள் வந்த விசைப்படகையும் இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்து திரிகோணமலைக்கு கொண்டு சென்றனர்.

### ஒரே மாதத்தில் 2 சம்பவங்கள்

நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டு இருந்த நாகை, மயிலாடுதுறை மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் 10 பேரை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து சென்ற சம்பவம் நாகை, மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. ஒரே மாதத்தில் இதுபோன்ற 2 சிறைபிடிப்பு சம்பவங்கள் நடந்து உள்ளதால் நாகை, மயிலாடுதுறை மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் மிகுந்த கவலையில் ஆழ்ந்து உள்ளனர். உயிரை பணயம் வைத்து தொழில் செய்யும் தங்களை நிம்மதியாக தொழில் செய்ய விடாமல் இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தொல்லை கொடுத்துவருவதால் தங்களுக்குஏற்பட்டு வரும் சொல்லொணா துயரத்திற்கு எப்போதுதான் தீர்வு கிடைக்குமோ? என்று வேதனை தெரிவித்தனர்.

### கோரிக்கை

எனவே இனிமேலும் இதுபோன்ற சம்பவங்கள் தொடராத வண்ணம் தாங்கள் நிம்மதியாக கடலுக்கு சென்று மீன்பிடித்து வர உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒன்றிய, மாநில அரசுகளுக்கு தமிழ்நாட்டு மீனவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

# ஆக.27 மாலை சென்னை பெரியார் திடலில்
## "பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் பார்வையில் விடுதலை ஆசிரியர்" - கருத்தரங்கம்

வாழ்க பெரியார்! வளர்க அவர்தம் கொள்கை!
விடுதலை 88
தோற்றம்:1935
உலகின் ஒரே பகுத்தறிவு நாளேடு
VIDUTHALAI - Tamil Rationalist Daily
www.viduthalai.in




# 60 ஆயிரம் 'விடுதலை' சந்தா களத்தில் கருஞ்சட்டை களப்பணித் தோழர்கள்!

## வீட்டுக்கு வீடு விடுதலை

தமிழ்நாட்டின் மூத்த பத்திரிக்கை 'விடுதலை' 88 ஆண்டுகளாக வீர நடைபோட்டு வருகிறது. அது ஏற்ற விழுப்புண்கள் ஏராளம்! ஏராளம்!! 'விடுதலை'யின் 60 ஆண்டுகால ஆசிரியர் என்ற சாதனைக்குரியவர் நமது தலைவர் ஆசிரியர்.

60 ஆண்டு விடுதலை ஆசிரியருக்கு நாம் கொடுக்கப் போவது பொன்னோ, பொருளோ அல்ல.

கொள்கைகளை நாளும் பரப்பும் தந்தை பெரியார் சித்தாந்தத்தின் போர்வாள்!

'விடுதலை'யை வீடுதோறும் சேர்ப்பீர்! வீட்டுக்கு வீடு செல்ல வேண்டாமா? அது தமிழரின் ஏடு அல்லவா!

விரைவீர், விரைந்து முடிப்பீர்!

**- கலி.பூங்குன்றன்,**
துணைத் தலைவர், திராவிடர் கழகம்










தமிழர் தலைவர் ஆணைக்கிணங்க விடுதலை சந்தா தாரீர் என்கிற பதாகை பிடித்து - தந்தை பெரியாரால் துவங்கி வைக்கப்பட்ட விடுதலை பத்திரிகைக்கு ஆசிரியராக பொறுப்பேற்று 60 ஆண்டுகளை குறிக்கும் வண்ணம் 60 ஆயிரம் விடுதலை சந்தா சேர்க்க தோழர்கள் முடிவு எடுத்ததின் பேரில் திருச்சி மாவட்ட கழக தலைவர் ஞா.ஆரோக்கியராஜ், தலைமையில் ஜெயில் பேட்டை பகுதி தலைவர் தமிழ்மணி, மாவட்ட இளைஞர் அணி செயலாளர் மகாமணி, மாவட்ட மகளிர் பாசறை செயலாளர் சங்கீதா, மாவட்ட மகளிர் அணி துணை தலைவர் வசந்தி, மகளிர் அணி அமுதா,மாநகர அமைப்பாளர் காட்டூர் கனகராஜ், காட்டூர் கிளை கழக செயலாளர் சங்கிலி முத்து, திருவரங்கம் பகுதி செயலாளர் முருகன், மாவட்ட மாணவர் கழக செயலாளர் அறிவுச்சுடர், மார்க்கெட் பகுதி செயலாளர் நேதாஜி, திருவரங்கம் பெரியார் படிப்பக பொன்னுசாமி, ஆகியோர் அடங்கிய குழு திருச்சியில் தமிழர் தலைவர் ஆலோசனையின் பேரில் முக்கிய இடமான ஜெயில் பேட்டை இரும்பு கடை வீதியில் இருந்து விடுதலை சந்தா சேர்ப்பு பணியை துவங்கி மதுரை சாலை வரை கடைக்கு கடை துண்டு பிரசுரம் கொடுத்து விடுதலையின் இதுவரையிலான செயல்பாடுகள் குறித்தும் இனி சமுதாயத்திற்கு ஆற்றப் போகிற சமூகப் பணிகள் குறித்தும் விளக்கப்பட்டது - கவனமாக கேட்டனர் அதில் மூன்று 3 அரையாண்டு சந்தாவும், 1330 ரூபாய் கடைவீதி வசூலும் செய்யப்பட்டது.



உரத்தநாடு பெரியார் படிப்பகத்திற்கு மன்னார்குடி செங்கமலத்தாயார்கல்வி அறக்கட்டளை மகளிர் கல்லூரி நிறுவனத் தாளாளர் ஆசிரியர் முனைவர் வி.திவாகரன் வருகைதந்தார்.பெரியார் அறக்கட்டளை உறுப்பினர் கு.அய்யாத்துரை, ஒன்றிய கழக தலைவர் த.செகநாதன், லிட்டில் ரோஸ் பள்ளி தாளாளர் வீ.அகிலன் ஆகியோர் பயனாடை போர்த்தி வரவேற்றனர்.

தமிழர் தலைவர் ஆற்றிவரும் அரும் பணிகளால் தமிழ்நாடு மதவெறியர்களின் கூடாரமாக ஆகாமல் பாதுகாக்கப்படுகின்றது என்றும் ஆசிரியர் அவர்கள் நல்லஉடல்நலத்தோடு இன்னும் அய்ம்பதாண்டுகள் வாழவேண்டும் என்பதே எனது விருப்பமாகும்எனதெரிவித்தார். எந்த லாபமும் கருதாது பாடுபடும் திராவிடர்கழக தொண்டர்கள்மீது மிகுந்தமரியாதையுண்டு என்றதோடு, தமிழர் தலைவர் ஆசிரியருக்கு அளிக்கப்படும் விடுதலை சந்தாவிற்கு தமது பங்காக அய்ந்தாண்டு விடுதலை சந்தாக்களுக்குரிய தொகைரூ.10.000 வழங்கினார்.

பெரியார் வீரவிளையாட்டுக்கழக மாநில செயலாளர் நா.இராமகிருட்டிணன், தஞ்சை தெற்கு ஒன்றிய செயலாளர் நெல்லுப்பட்டு அ.இராமலிங்கம், தஞ்சைமாநகர அமைப்பாளர் செ.தமிழ்ச்செல்வம், அமிர்தா புத்தக நிலைய உரிமையாளர் மா.திராவிடச்செல்வம், விடுதலை சந்தாவசூல்குழுத்தலைவர் பொறியாளர் வ.பால கிருட்டிணன், வசூல்குழுபொருளாளர் கு.நேரு, பொறியாளர் நெடுவை ந.நேரு, ஒன்றிய தி.க அமைப்பாளர் பு.செந்தில்குமார், ஒன்றிய துணைச் செயலாளர் நா.பிரபு ,மாவட்ட பகுத்தறிவு ஆசிரியரணி அமைப்பாளர் கு.குட்டிமணி, நகர செயலாளர் ரெ.ரஞ்சித் குமார் ,தெற்கு பகுதி செயலாளர் க.சுடர்வேந்தன், மேற்கு பகுதி செயலார் இரா.மோகன்தாஸ் ,பெரியார் நகர் இரா.மகேஸ்வரன், ஒக்கநாடு மேலையூர் ச.பெரியார்மணி உள்ளிட்டதோழர்கள் மகிழ்ச்சியும் நன்றியும் தெரி-வித்துக்கொண்டனர்.

## தருமபுரி மாவட்ட திராவிடர் கழக இளைஞரணி சார்பில் விடுதலை சந்தா சேகரிப்பு



வெதரம்பட்டி அரசு நடுநிலைப்பள்ளியில் பணியாற்றும் பெரியார் உணர்வாளர் ஆசிரியர் சத்தியநாராயணன் ஓராண்டு விடுதலை சந்தா மற்றும் கம்பைநல்லூர் குமார் பெட் ஒர்க்ஸ் உரிமையாளர் மு.குமார் ஓராண்டு விடுதலை சந்தாவினை வழங்கினர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.வினோத்குமார் தலைமையில், மாநில இளைஞரணி துணை செயலாளர் மா.செல்லதுரை ஒருங்கிணைப்பில், மண்டல மாணவர் கழக செயலாளர் இ.சமரசம், மாவட்ட இளைஞரணி தலைவர் த.மு.யாழ் திலீபன், கருநாடக மாநில மாணவர் கழக தலைவர் மா.முனியப்பன், வெதரம்பட்டி சிரிதரன் முன்னிலையில் விடுதலை சந்தா சேர்க்கும் பணி சிறப்பாக நடைபெற்றது.







திருவரங்கம் பெரியார் பெருந்தொண்டர் ச. திருநாவுக்கரசு விடுதலை நாளிதழுக்கான ஓராண்டு சந்தா ரூ.2000அய் ஆசிரியர் அவர்களிடம் வழங்கினார். விருத்தாசலம் கடை வீதி வசூலின்போது செயங்கொண்டம் ஒன்றிய கழக செயலாளர் துரை. பிரபாகரன் - வளர்மதி குடும்பத்தின் சார்பாக பெரியார் பிஞ்சுகள் மணிமாறன் - கண்மணி ஆகியோர் விடுதலை நாளேட்டிற்கு ஆண்டு சந்தா ரூ2000த்தை அளித்தனர் (20.8.2022).









சுயமரியாதைச் சுடரொளி எம்.எஸ்.நாராயணன் மகன் தலைமையாசிரியர் அறிவழகன் குடும்பத்தின் சார்பில் ஓராண்டு விடுதலை சந்தா ரூ. 2000 அரியலூர் மாவட்டப் பொறுப்பாளர்களிடம் வழங்கப்பட்டது. (20.8.2022). திருவள்ளூர் மாவட்டம், வெங்கத்தூர் கிராமத்தைச் சார்ந்த வழக்குரைஞர் வீ.மணிமாறன் ஓராண்டு விடுதலை சந்தாவினை திராவிடர் கழக மாவட்ட துணை செயலாளர் இரா.ஸ்டாலினிடம் வழங்கினார். திருப்பயத்தங்குடி ஊராட்சி திருமாளம்பொய்கை தி.மு.க கிளைச் செயலாளர் நா.முருகராஜ் ஓராண்டு சந்தா ரூ. 2000 வழங்கினார். கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் ஒன்றிய திமுக செயலாளராக பொறுப்பேற்றிருக்கும் பாபு நாகர்கோவில் பெரியார் மய்யத்திற்கு வந்து பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியதோடு விடுதலை நாளிதழுக்கான சந்தாக்களை மாவட்ட திராவிடர் கழக செயலாளர் கோ.வெற்றி வேந்தனிடம் வழங்கினார்.







சிதம்பரம் நகை வியாபாரிகள் சங்கத் தலைவர் எஸ்.ஆர்.இராமநாதன் மற்றும் சிதம்பரம் நகர்மன்ற உறுப்பினர் ஆர்.மக்கீன் ஆகியோர் சிதம்பரம் மாவட்டத் தலைவர் பேராசிரியர் பூ.சி.இளங்கோவனிடம் விடுதலை சந்தாக்களை அளித்தனர். திருவள்ளூர் மாவட்டம், மேல்நல்லாத்தூர் கிராமத்தைச் சார்ந்த டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் கிராம கமிட்டித் தலைவர் ஆர்.வி.சத்தியமுல்லை ஓராண்டு விடுதலை சந்தாவினை திராவிடர் கழக மாவட்ட துணை செயலாளர் இரா.ஸ்டாலினிடம் வழங்கினார். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தொகுதிச் செயலாளர் ஆர்.வி.யோகா உடனிருந்தார்.



# மகளிர் அரங்கம்

## பெண்களுக்கு உதவும் நிதி நிர்வாக அட்டவணை!



பொருளாதார ரீதியில் முன்னேற வேண்டுமெனில் வரவு - செலவை திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும். சில நேரங்களில் செலவுகள் அதிகரிக்கும்போது சேமிக்க முடியாமல் போகும்.

இதைத் தவிர்பபதற்கு துல்லியமாக 'நிதி நிர்வாக அட்டவணை' மூலம் திட்டமிட்டால் ஓரளவாவது சேமிக்க முடியும் என்று நிதி ஆலாசகர்கள் தெரிவிக்கின்றனர்.

'நிதி நிர்வாக அட்டவணை' என்பது வரவு - செலவை மட்டும் குறிப்பிடுவதல்ல. மொத்த ஊதியம், வருமானம் அல்லது நிதி பெறப்படும் நாட்கள் எவை? எந்தச் செலவுகளை எப்போது செய்வது?

அன்றாட நிதி நிலை, கடன்கள், அவசர நிதி, சேமிப்பு உள்ளிட்ட சகல நிதி சார்ந்த நடவடிக்கைகளையும், ஒவ்வொரு நாளும் சரிபார்க்கும் செயல் திட்டமாகும். அதனால் அன்றாடச் செலவுகளை மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் ஏற் படக்கூடிய செலவினங்களையும் அறிந்து தயார் நிலையில் இருக்கலாம். 'நிதி நிர்வாக அட்டவணை' இப்போது திறன்பேசி செயலிகளாக கிடைக்கிறது. அதை தற்போதைய மாதத்தின் 30 நாட்களுக்கும் மற்றும் அடுத்த மாதத்தின் 3 நாட்களுக்கும் கணக்கிட்டு அமைத்துக் கொள்ளலாம்.

ஊதியம் அல்லது வருமானம் கிடைக்கும் நாட்கள், வீட்டு வாடகை அல்லது வீட்டுக்கான கடன், மளிகை, மின்சாரக் கட்டணம், தொலைப்பேசி கட்டணம், சமையல் எரிவாயு, கிரெடிட் கார்டு, இண்டர்நெட் கட்டணம், குழந்தைகளின் கல்விக் கட்டணம், மருத்துவச் செலவு, ஆயுள் காப்பீடு, பெட்ரோல் மற்றும் வாகன பராமரிப்பு, இதர கடன்கள், பண்டிகைக்கால செலவுகள், பொழுது போக்கு மற்றும் மாதாந்திர சேமிப்பு ஆகிய செலவினங்களை ஒரு மாதம் தொடங்கும் முன்னரே நிதி அட்டவணை மூலம் பிரித்து கணக்கிட்டுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு நாளுக்கான வரவு - செலவு குறித்த அறிவிப்பை சம்பந்தப்பட்ட நாளின் தொடக்கத்திலேயே 'திறன்பேசி காலண்டர் செயலி' தெரிவித்துவிடும். வரவு - செலவுகளை அறிந்து செயல்படுவதன் மூலம் தேவையற்ற காலதாமத்தை தவிர்க்கலாம். அடுத்த வாரம் அல்லது 10 நாட்கள் கழித்து செய்ய வேண்டிய செலவினங்களையும் முன்னதாக அறிந்து, அதற்கு ஏற்ப செயல்படலாம்.

பணிபுரியும் திருமணமாகாத இளம் பெண்களைப் பொறுத்த வரையில், அவர்களது செலவுகள் பெரும்பாலும் திட்டமிடப்பட்டதாகவே இருக்கும். அவர்களது வருமானத்துக்கேற்ப, 'நிதி நிர்வாக அட்டவணையைப்' பயன்படுத்தினால் சேமிப்பை அதிகரிக்கலாம். செலவுகளை முன்னதாகவே, அலைபேசி காலண்டர் மூலம் அந்தந்த நாட்களில் பதிவு செய்து கொண்டு கடிகாரம் மூலம் அலாரம் 'செட்' செய்து கொள்ளலாம். அதன் வழியாக அத்தியாவசிய செலவுகளை அறியலாம், தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்த்து விடலாம்.

## பெண்களைத் தாக்கும் ரத்த சோகையும் - தடுக்கும் வழிமுறைகளும்...!



திருமண வயதுடைய பெண்களில் 52 விழுக்காடு பேர் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ரத்த சோகைக்கான முதன்மை காரணம் இரும்புச்சத்துக் குறைபாடு.

உலக அளவில் 800 மில்லியனுக்கும் அதிகமான பெண்களை ரத்தசோகை நோய் பாதிக்கிறது என்று கணக்கெடுப்புகள் கூறுகின்றன. இந்தியாவில், இது ஒரு பெரிய பொது சுகாதார பிரச்சினையாக வகைப்படுத்தப்பட்டு உள்ளது, ஏனெனில், திருமண வயதுடைய பெண்களில் 52% பேர் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ரத்த சோகைக்கான முதன்மை காரணம் இரும்புச்சத்து குறைபாடு.

மிகுந்த சோர்வு, பலவீனம், வெளிறிய தோல், மார்பு வலி, வேகமான இதயத்துடிப்பு அல்லது மூச்சுத் திணறல், தலைவலி, தலைசுற்றல், கை கால்களில் சில்லென்ற உணர்வு, நாக்கில் புண் அல்லது வீக்கம், பலமற்ற உடையக்கூடிய நகங்கள், பசியற்ற உணர்வுஞ் இதுபோன்ற பிரச்சினைகளில் ஏதாவது ஒன்று இருந்தாலும் உடனடியாக மருத்துவரிடம் சென்று அவர் பரிந்துரைக்கும் பரிசோதனைகள் மற்றும் மருந்துகளை எடுத்துக் கொள்வதுடன் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இரும்புச்சத்து நிறைந்த உணவுகளை தேர்ந்தெடுத்து உண்பதன் மூலம் ரத்தசோகை நோய் ஏற்படாமல் தவிர்க்க முடியும். இறைச்சி, கடல் உணவு, பீன்ஸ், அடர் பச்சை நிறத்தில் இருக்கும் காய்கறிகள், கீரைகள், திராட்சை மற்றும் ஆப்ரிகாட் போன்ற உலர்ந்த பழங்கள், இரும்பு செறிவூட்டப்பட்ட தானியங்கள்.. உங்கள் உடல் மற்ற மூலங்களிலிருந்து பெறுவதை விட இறைச்சியிலிருந்து அதிக அளவு இரும்புச்சத்தை உறிஞ்சுகிறது.. நீங்கள் இறைச்சி சாப்பிடாதவராக இருக்கும் பட்சத்தில் தாவர அடிப்படையிலான உணவுகளை அதிக அளவில் உட்கொள்ள வேண்டியிருக்கும்.

ஆரஞ்சு பழச்சாறு போன்ற சிட்ரஸ் பழச்சாறுகளில் உள்ள வைட்டமின் 'சி', உணவில் உள்ள இரும்புச்சத்தை சிறப்பாக உறிஞ்சுவதற்கு உங்கள் உடலுக்கு உதவுகிறது. ப்ராக்கோலி, திராட்சைப்பழம், கிவி, கீரைகள், முலாம் பழங்கள், ஆரஞ்சு, மிளகு, ஸ்ட்ராபெரி மற்றும் தக்காளியில் வைட்டமின் 'சி' ஆனது காணப்படுகின்றது.

## பெண் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகளுக்கும் உண்டு

"தற்போது பொருளாதாரத்தை மய்யப்படுத்தித்தான் நமது வாழ்க்கை நகருகிறது. கிராமங்கள், நகரங்களில் வசிக்கும் நடுத்தர, வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களில் உள்ள கணவன்-மனைவி இருவரும் வேலைக்குச் செல்வது கட்டாயம்.

எனவே, குழந்தைகளை வளர்ப்பதில் முழு நேரத்தையும் செலவிட அவர்களால் முடிவதில்லை. இதனாலும் குழந்தைகள் தங்கள் விருப்பம்போல இருக்கவும், அடுத்தவர்களின் சீண்டல்களுக்கு ஆளாகவும் நேரிடுகிறது. இணையதளம், சமூகவலைதளங்களில் வரும் ஆபத்து நிறைந்த நிகழ்ச்சிகள், தவறான பாதைக்குள் தள்ளும் தகவல்கள், இளைய சமுதாயத்தின் உணர்வுகளை தூண்டும் வகையில் காட்சிப்படுத்தப்படுகின்றன. வாட்ஸ்அப், முகநூலில் வரும் அபாய தகவல்கள் எளிதாக மாணவிகளின் மனதுக்குள்ளும் ஊடுருவி பாழ்படுத்துகின்றன.

குறிப்பாக இன்ஸ்டாகிராம் மூலம் பேசிப் பழகினால் அதை காவல்துறையினர் கண்டு பிடிப்பது கடினமானது. இதில் பழகிய 14 வயது சிறுமியும், 19 வயது இளைஞரும் சென்னைக்குச் சென்றனர். அங்கு ஒருவரிடம் சிக்கிய சிறுமி, பாலியல் வன்கொடுமைக்கு ஆளான நிகழ்வு வெளிவந்துள்ளது. இதற்கு யார் காரணம்? சிறுமியின் அறியாமை என்பதா அல்லது சமூகவலைதள மோகம் என்பதா? பல்வேறு பாலியல் வன்கொடுமை நிகழ்வுகளில் சிக்கும் மாணவிகளுக்கு கலந்தாய்வு அளிக்கிறோம். அவ்வாறான நேரங்களில் அவர்களுடன் உரையாடும்போது, தங்களிடம் பழகியவர்களை அவர்கள் விட்டுக் கொடுப் பதே இல்லை.

இதற்கு அவர்களின் வீட்டில் உள்ளவர்கள், இதுபோன்ற நிலையில் இருக்கும் மாணவிகளிடம் போதிய அன்பு காட்டுவதில்லை என்ற காரணத்தை அறிய முடிகிறது. எனவே பெற்றோர், தங்களின் பிள்ளைகளிடம் இணக்கமாக இருந்தால்தான், இது போன்ற தவறுகள் தவிர்க்கப்படும். பள்ளிகளில் முன்பைப்போல மாணவர்களைக் கண்டிக்க முடிவதில்லை. அதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன.

மாணவ-மாணவிகள் பாலியல் சம்பந்தமான பிரச்சினைகளில் சிக்கினால், மீண்டும் அந்தப் பள்ளியில் அவர்களுக்கு இடம் கொடுப்பதில்லை. உடனடியாக நீக்கப்படுகின்றனர். தெரிந்தோ, தெரியாமலோ இது போன்ற நிகழ்வுகளில் சிக்கிய அவர்களை அந்தப் பள்ளியே நிராகரித்தால் அவர்கள் எங்கே போவார்கள்? இளம் சமுதாயத்தினருக்கு சரியான வழியைக் காட்ட வேண்டுமானால் பெற்றோர்கள், ஆசிரியர்கள், தொழில்நுட்பம் என அனைத்தையும் மாற்றுப்பாதைக்கு கொண்டு செல்வது அவசியம். ஒழுக்கத்தையும், நல்ல சிந்தனைகளையும் இளைய சமுதாயத்திற்கு கற்றுத் தருவதற்கான கோட்பாடுகளை செயல்படுத்துவது அரசின் கடமை. இதை பள்ளிகளின் வாயிலாகத்தான் நிறைவேற்ற முடியும்"

## பெரியார் நூற்றாண்டு நினைவு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மரக்கன்று நடும் விழா



**திருச்சி, ஆக. 23-** இந்திய நாட்டின் 75ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவை முன்னிட்டு, திருச்சி பெரியார் நூற்றாண்டு நினைவு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் தேசிய பசுமைப் படையினைச் சேர்ந்த 24 மாணவர்கள் மற்றும் பொறுப்பாசிரியை அனிதா உள்ளிட்ட குழுவினர் பள்ளியின் தோட்டத்திற்கு, மா, பலா, கொய்யா, வேம்பு, புளியங்கன்று, மாதுளை, தேக்கு உள்ளிட்ட மரக் கன்றுகளை மற்றும் மூலிகைச் செடிகளையும் சேர்த்து 75ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை குறிக்கும் வகையில் 75 மரக்கன்றுகளை பள்ளி முதல்வர் டாக்டர் க.வனிதா அவர்களிடம் வழங்கினார்கள்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் மரம் நடும் செயலை ஊக்குவிக்கும் விதமாக மரக்கன்றுகள் வழங்கிய தேசிய பசுமைப்படை மாணவர்களையும், அதன் பொறுப்பாசிரியையும் முதல்வர் ஆசிரியர்கள் உள்ளிட்டோர் பாராட்டி மகிழ்ந்தனர்.

## அரசுப் பணி: தமிழ் தகுதித்தேர்வு ஆசிரியர் தேர்வு வாரியம் அறிமுகம்



**சென்னை, ஆக. 23-** தமிழ் மொழி தகுதித் தேர்வில் தேர்ச்சி கட்டாயம் என்ற அறிவிப்பை ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ளது. பிற மாநிலத்தவர்கள் தமிழ்நாட்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தக்கூடிய பல்வேறு தேர்வுகளில் நுழைவதை கட்டுப்படுத்தும் விதத்தில் இந்த நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலில் காலியாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களுக்கான அறிவிப்பை ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டிருக்கிறது. அதன்படி 24 மூத்த விரிவுரையாளர், 82 விரிவுரையாளர், 49 இளநிலை விரிவுரையாளர் என மொத்தம் 155 காலி பணியிடங்கள் இருப்பதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேர்வில் தமிழ் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுவது கட்டாயம் என்னும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 50 மதிப்பெண்களுக்கு 30 கேள்விகள் கேட்கப்படும். தேர்வு நேரம் 30 நிமிடங்கள் ஆகும். இதில், குறைந்த பட்சம் 40% (20 மதிப்பெண்கள்) எடுத்து தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெற்றால் மட்டுமே பிரதான விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பகுதி 'ஆ' பிரிவில், 150 மதிப்பெண்ணில் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்ணாக எஸ்.சி. பிரிவினருக்கு 68 மதிப்பெண்ணும், எஸ்.டி. பிரிவினர் 60 மதிப்பெண்ணும், மற்ற பிரிவினருக்கு 75 மதிப்பெண்ணும் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. இந்த தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான தேதி விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது.

# பெரியார் திடலில் சென்னை தினம்!





**சென்னை, ஆக. 23-** தமிழ் மரபு அறக்கட்டளையின் தலைவர், செருமனி நாட்டைச் சார்ந்த சுபாஷினி அவர்கள் தம் குழுவினரோடு ஆகஸ்ட் 21ஆம் தேதி அன்று, வடசென்னையில் இருக்கின்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களைப் பார்வையிடத் திட்ட மிட்டு, அதன்படி தங்கள் குழுவினரோடு காலை 6 மணிக்குத்தொடங்கிவெவ்வேறு பகுதிகளுக்குச் சென்று விட்டு, பிற்பகல் 2:30 மணியளவில் பெரியார் திடலுக்கு வந்திருந்தனர்.

கோ. ஒளிவண்ணன், ச.பிரின்சு என்னாரெசு பெரியார் ஆகியோர் வந்திருந்தவர்களை வரவேற்றனர்.

பிரின்சு என்னாரெசு பெரியார் முதலாவதாகப் பெரியார் திடலில் அமைந்துள்ள பல்வேறு அமைப்புகளைப் பறவைப் பார்வையில் விவரித்தார். திடல் உருவான வரலாற்றை விளக்கத் தொடங்கியவுடன் வந்திருந்தவர்களிடையே உற்சாகம் தொற்றிக் கொண்டது.

பின் அருங்காட்சியகத்துள் மாட்டியுள்ள படங்களையும் ஓவியங்களையும் முதலில் மேலோட்டமாகக் குறிப்பிட்டு விட்டு, பின் ஒவ்வொன்றின் வரலாற்று நிகழ்வுகளை விளக்கும்போது ஒரு நூறாண்டு வரலாற்றைக் குழுவினர் அறிந்து கொள்ள முடிந்தது.

பிறகு அய்யா பெரியார், அம்மா நினைவகங்கள் அங்கே அய்யாவின் இறுதி நாட்களைச் சொல்லும்போது கண்கள் கசிந்துருகின. அம்மாவின் தன்னலமற்ற சேவை, ராவண லீலா போன்றவற்றை விவரிக்கும் போது ஆச்சரியத்தோடு கேட்டனர். அய்யாவின் எழுத்துச் சீர் திருத்தத்தை விளக்கியபோது தமிழ் மரபுக் குழுவினர் வியந்தனர்.

குழுவினர் தங்கள் அய்யங்களைப் போக்கத் தொடுத்த வினாக்களுக்குப் பொறுமையாகப் பதில் அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து, குழுவை அழைத்து வந்த அதனுடைய தலைவர் சுபாஷினி அவர்களுக்குப் பயனாடை அணிவிக்கப்பட்டு நன்றி கூறப் பட்டது.

சுபாஷினி, தான் இதுவரை சென்றிருந்த ஆயிரத்திற்கும் மேலான அருங்காட்சியகங்களில், சுவீடன் நாட்டிலுள்ள நோபல் பரிசு அருங்காட்சியகம் சிறப்புமிக்க ஒன்று எனவும் அங்கிருந்த பொறுப்பாளர் எப்படி மிகவும் சிரத்தை எடுத்துரைப் பாரோ, அதைப்போல ஈடுபாட்டுடன் இன்று பல்வேறு செய்திகளை எடுத்து இயம்பினர் எனவும் புகழ்ந்து பாராட்டி, தான் எழுதிய நூல்களை பெரியார் பகுத்தறிவு ஆய்வு நூலகத்திற்கு பிரின்சு என்னாரெசு பெரியார் வழியாக வழங்கினார்.

வந்திருந்த 40க்கும் மேற்பட்ட குழு நண்பர்கள் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக பல்வேறு செய்திகளை, குறிப்பாகத் திராவிட இயக்கம் மற்றும் தமிழ்நாடு வரலாறு, அய்யா பெரியாரின் அரும்பணிகள், அதனைத் தொடர்ந்து தமிழர் தலைவர் அவர்களுடைய செயற்கரிய செயல்கள் இவற்றை விரிவாக அறிந்து கொண்டனர்.

வந்திருந்த இக்குழுவினர் பல தரப்பட்டவர்கள். முனைவர் பட்டம் பெற்றவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், தொல்லியல் துறை சார்ந்தவர்கள் என பல்வேறு துறைகளில் இயங்குபவர்கள். வந்திருந்தவர்களில் ஓரிருவர் தவிர மற்றவர்கள் அனைவருமே முதன்முறையாகத் திடலுக்கு வருபவர்கள்.

பயணத் திட்டத்தில் அடுத்த இடத்திற்குச் செல்ல வேண்டும் என்பதை மறந்து, குழுவாகப் ஒளிப்படங்கள் எடுத்துக் கொள்வதும், சுயமி எடுத்துக் கொள்வதும் எனத் திடலை விட்டுப் பிரிய மனமில்லாமல் வலம் வந்தனர். இறுதியில், இன்றைக்கு இந்த நினைவுகளையே சுமந்து செல்வோம் என்று அடுத்த திட்டத்தைத் துறந்தனர்.

இந்நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடப்பதற்காக பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ் அவர்கள் பெரும் சிரத்தை எடுத்துக் கொண்டார். அனைவரையும் ஒருங்கிணைத்து இந்நிகழ்ச்சி நடக்கக் காரணமாக இருந்த பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத் துணைத் தலைவர் எமரால்ட் கோ.ஒளிவண்ணன் நன்றி கூறினார். கலைமணி ஒருங்கிணைப்பில் உதவினார்.



Registrar News Paper of India No. 1412/57 Postal Registration No.TN/CCN/440/2021-2023 and WPP Licence No.TN/PMG(CCR)/WPP-426/2021-2023


# திருவாரூரில் தமிழர் தலைவர் பங்கேற்ற நிகழ்ச்சிகள்



சுயமரியாதைச் சுடரொளிகள் எஸ்.எஸ். மணியம் - இராசலெட்சுமி ஆகியோரின் கொள்ளுப்பேத்தியும், கிருஷ்ணமூர்த்தி -அமிர்தகவுரி ஆகியோரின் பேத்தியும், அருண்காந்தி - சாந்தி ஆகியோரின் மகளுமான பொறியாளர் அருளி என்கிற அருள்மணி, இளங்கோவன் - விஜயசாமுண்டீஸ்வரி ஆகியோரின் மகன் பொறியாளர் ஜெயசுதன் ஆகியோரின் வாழ்க்கை இணையேற்பு விழாவினை தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமை ஏற்று நடத்தி வைத்தார். உடன்: திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், மேனாள் அமைச்சர் மதிவாணன், திருவாரூர் மாவட்ட தி.மு.க. செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே. கலைவாணன், மோகனா வீரமணி மற்றும் முக்கிய பிரமுகர்கள், குடும்பத்தினர் உள்ளனர். (23.8.2022)






திருவாரூருக்கு வருகை தந்த தமிழர் தலைவருக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் பயனாடை அணிவித்து வரவேற்பு அளித்தனர். (22.8.2022)





அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மாவட்ட பொறுப்பாளர்கள், ம.தி.மு.க. மாவட்ட பொறுப்பாளர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட பொறுப்பாளர்கள் தமிழர் தலைவருக்குப் பயனாடை அணிவித்து வரவேற்றனர்





**படம் 1:** நாகை மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஆர்.என். அமிர்தராஜா, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ். அழகிரி ஆகியோர் விடுதலை சந்தா தொகை ரூ.10,000/-த்தை தமிழர் தலைவரிடம் வழங்கினர். **படம் 2:** பொறியாளர் ஜெயபிரகாஷ் நாராயணன் விடுதலை சந்தா தொகை ரூ.25,000/-த்தை தமிழர் தலைவரிடம் வழங்கினார். (திருச்சி, 22.8.2022) **படம் 3:** மூத்த பொறியாளர் பேராசிரியர் எல்.ஜே. சுப்பிரமணியம் இல்லத்துக்கு தமிழர் தலைவர் நேரில் சென்று பயனாடை அணிவித்து உடல் நலம் விசாரித்தார். உடன்: மோகனா வீரமணி, பெரியார் பாலிடெக்னிக் முதல்வர் மல்லிகா, இளங்கோவன்.

# அர்ச்சகர், ஓதுவார் பயிற்சி வகுப்புகள் தொடக்கம் : முதலமைச்சர் ஸ்டாலின் ஆணை

**சென்னை, ஆக. 23** இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மேம்படுத்தப்பட்ட 6 அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் உள்பட 9 பயிற்சிப் பள்ளிகளின் பயிற்சி வகுப்புகளை காணொலிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து, அப்பள்ளிகளில் பயிலவுள்ள மாணவர்களுக்கு சேர்க்கை அனுமதி ஆணைகளை வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று (22.8.2022) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள சென்னை, திருவண்ணாமலை, மதுரை, திருச்செந்தூர், பழநி மற்றும் சிறீரங்கம் ஆகிய இடங்களில் மேம்படுத்தப்பட்ட 6 அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளில் 151 மாணவர்களுடனும், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில் ஓதுவார் பயிற்சிப் பள்ளி, கும்பகோணம் நாகநாதசுவாமி திருக்கோயில் தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளி, திருவில்லிப்புத்தூர் நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில் திவ்ய பிரபந்தப் பாடசாலை ஆகிய 3 பயிற்சிப் பள்ளிகளில் 46 மாணவர்களுடனும், பயிற்சி வகுப்புகளை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்து, அப்பள்ளிகளில் பயிலவுள்ள மாண வர்களுக்கு சேர்க்கை அனுமதி ஆணை களை வழங்கிடும் அடையாளமாக 18 மாணவர்களுக்கு சேர்க்கை அனுமதி ஆணைகளை வழங்கினார்.

2021-2022 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக் கையில், "ஜாதி வேறுபாடின்றி அர்ச்சகர்களை உருவாக்கும் இந்து சமய அறநிலையத்துறையின் 6 அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்" எனவும், "சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் புதிய ஓதுவார் பயிற்சி பள்ளி ஏற்படுத்தப்படும்" எனவும், "திருநாகேஸ்வரம் நாகநாதசாமி திருக்கோயிலில் உள்ள தவில் நாதஸ்வர இசைப் பள்ளி மேம்படுத்தப்படும்" எனவும், "சிறீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயில் சார்பாக திவ்ய பிரபந்த பாடசாலை மீண்டும் தொடங்கப்படும்" எனவும் அறிவிக்கப்பட்டன.

அதன்படி, சென்னை (வைணவம்), திருவண்ணாமலை (சைவம்), மதுரை (சைவம்), திருச்செந்தூர் (சைவம்), பழநி (சைவம்) மற்றும் சிறீரங்கம் (வைணவம்) ஆகிய இடங்களில் மேம்படுத்தப்பட்ட 6 அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளில் 151 மாணவர்களுடனும், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில் ஓதுவார் பயிற்சிப் பள்ளி, கும்பகோணம் நாகநாதசுவாமி திருக்கோயில் தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளி, திருவில்லிப்புத்தூர், நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில் திவ்ய பிரபந்தப் பாடசாலை ஆகிய 3 பயிற்சிப் பள்ளிகளில் 46 மாணவர்களுடனும், பயிற்சி வகுப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்து, அப்பள்ளிகளில் பயிலவுள்ள மாணவர்களுக்கு சேர்க்கை அனுமதி ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 18 மாணவர்களுக்கு சேர்க்கை அனுமதி ஆணைகளையும் வழங்கினார்.

மேற்கண்ட 6 அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் உள்பட 9 பயிற்சிப் பள்ளிகளும் உண்டு உறைவிட பள்ளியாக செயல்படுவதோடு, பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ.3000 வீதம் ஆண்டு ஒன்றிற்கு மொத்தம் 70.92 லட்சம் ரூபாய் உதவித் தொகை திருக்கோயில்கள் சார்பாக வழங் கப்படுகிறது இந் நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் ஜெ.குமரகுருபரன், காணொலிக் காட்சி வாயிலாக திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், மதுரை, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்



பெரியார் மருந்தியல் கல்லூரி முதல்வர் முனைவர் இரா.செந்தாமரை அவர்கள் தமிழ்நாடு அனைத்து பதிவு பெற்ற மருந்தாளுநர்கள் நல கூட்டமைப்பு வழங்கிய மாநில அளவிலான சிறந்த மருந்தாளுநர் விருது பெற்றமைக்காக தமிழர் தலைவர் பயனாடை அணிவித்து வாழ்த்துகளை தெரிவித்தார்.

VIDUTHALAI - Rationalist Tamil Daily-Printed and published by K. Veeramani, M.A.,B.L., on behalf of The Periyar Self-Respect Propaganda Institution and printed at Viduthalai Offset Printers, Periyar Thidal, 84/1(50), EVK Sampath Road, Vepery, Chennai - 600 007 and published from Periyar Thidal, 84/1(50), EVK Sampath Road, Vepery, Chennai - 600 007. Editor: K. Veeramani, M.A.,B.L.Phone: 044-26618161 Fax: 044-26618866 Email: viduthalaimalar@gmail.com